
விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, புரட்டாதி 9 உ வியாழன் (25-9-69) றஜபு 12 புத்தகம் 23 இதழ் 46




# "அறிஞர் அண்ணாவுக்கும் தி. மு. க. வுக்கும் அவமானம் ஏற்படுத்த சூழ்ச்சி

## சுதந்திரக் கட்சிக்கு செல்வாக்கு தேட கைக்கூலிகளின் கபட நாடகம்"

## போலி வேடதாரிகளின் முகமூடியை கிழித்தெறிகிறார் மணவைத்தம்பி!

இ. தி. மு. க. என்ற பெயருடன் யாழ்நகரில் சில போலிகள் கூடி வைத்து வேட்டுக் கூச்சல் கிளப்பியுள்ளனர். பொதுத் தேர்தலில் போட்டியிடு வது என்று இவர்கள் தீர்மானித்துள்ள தன் மூலம் பேரறிஞர் அண்ணாவின் புகழுக்கும் தமிழ் நாட்டு முதல்வர் திரு. மு. கருணாநிதிக்கும், தமிழக தி. மு. க. வுக்கும் இந்நாட்டில் இருக்கும் செல்வாக்குககு இழுக்கையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டியுள்ளார்கள். அதே வேளையில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டு 'கொரில்லாப் போர்', 'வன்முறை' என்பன போன்ற ஏது மற்ற வெற்று வேட்டு கூக்குரல்களை எழுப்பி, சிங்கள மக்களிடையே வகுப்புவாத உணர்வை வளரச்செய்து அடுத்த தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு வெற்றி தேடிக் கொடுக்கவும் நடைபெற்றசூழ்ச்சி இது'—

—இவ்வாறு இ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் பகிரங்கமாக சாடியுள்ளார்:

திரு. மணவைத்தம்பியின் அறிக்கை விபரம் வருமாறு:-

யாழ்நகரில் கடந்தவாரம் வெற்று வேட்டுக்கள்—தில்லுமுல்லுக்காரர்கள் சிலர் இ. தி. மு. க. என்ற லேபலில்கூடி வரட்டுக் கூச்சல் போட்டிருக்கின்றனர். பொறுப்புணர்வு இல்லாமல் உளறி இருக்கின்றனர். இவர்களையிட்டு தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இ. தி. மு. க. அரசியலில் ஈடுபடத்தேவையில்லை; இ. தி. மு. க. அரசியலில் ஈடுபடுவதால் இந்நாட்டுத்தமிழ் மக்களுக்குநன்மைக்குப்பதில் பல தீமைகளே ஏற்படும். இதன் காரணமாகவே அரசியலில் ஈடுபடுவதில்லை என்று இ. தி. மு. க. அதிகாரபூர்வமாக முடிவு எடுத்திருக்கிறது. அரசியலில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், இந்நாட்டுத் தமிழினத்தின் விடுதலைக்காக தியாக உணர்வுடன் உண்மையாகப் போராடி வரும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு பூரண ஒத்துழைப்பையும் அளித்து வருகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் கூடிய சில போலி மனிதர்கள், இ. தி. மு. க. என்ற பெயரைச் சொல்லிக் கொண்டு கபட நாடகம் ஆடியிருக்கிறார்கள். வன்முறை, பலாத்காரம் என்பனவற்றை அண்ணா கனவில் கூட எண்ணியதில்லை. சனநாயகத்திலும், அஹிம்சையிலும் நம்பிக்கையுள்ளவர் அண்ணா. வன்முறையில் ஈடுபடுபவன் என் தம்பி ஆகான் என்று அண்ணா அடிக்கடி கூறுவது வழக்கம். அத்தகைய அண்ணாவின் திருப்பெயரில் அமைந்துள்ள அரங்கில் நின்றுகொண்டு கொரில்லாப் போர், வன்முறையிலீடுபடுவோம் பொலீஸ் நிலையங்களை கைப்பற்றுவோம் மலையகத்தை, ஆக்கிரமிப்போம்! என்று விழல்தனமாக—பொறுப்புணர்வு இல்லாமல் உளறியிருக்கின்றனர்.

இவர்கள் இப்படி உளறியிருப்பதன் உள்நோக்கம் என்ன? இ. தி. மு. க. வைப் பயங்கர பூதமாக்கிய சிங்கள மக்களுக்கு காட்டி வரும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு செல்வாக்குத் தேடிக் கொடுப்பதுதான். இ. தி. மு. க. என்ற பெயரைப் பயன்படுத்தி சிங்கள மக்களிடம் இன வெறியில் பிரச்சாரம் செய்து அடுத்த தேர்தலில் வெற்றிபெற சுதந்திரக்கட்சி திட்டம் தீட்டியுள்ளது. சுதந்திரக் கட்சியிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டுள்ள போலிகள் அத்திட்டத்துக்கு உதவுவதற்காக சூழ்ச்சி செய்கின்றனர். இவர்களைப் பற்றி தமிழ் மக்களும் சிங்

(9ம் பக்கம் பார்க்க)

## கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு....!

பல நாள் கள்ளன் ஒரு நாள் அகப்படுவான் என்பது போல நாளிலும் பொழுதிலும் தமிழரசுக்கட்சிக்கு எதிராக பொய் எழுதிப் பிழைத்து வந்த 'தினபதி' ஆசிரியர், பண்டிதர் இரத்தினம் அவர்களின் பாராளுமன்றப்பணிமீது களங்கம் கற்பிக்கும் நோக்குடன் முழுப்பொய் எழுதினார். ஆனால் உண்மை வென்றது! நியாயம் ஜெயித்தது. அதனால் தாம் பொய் எழுதியதற்காக கடந்தவாரம் தினபதி ஆசிரியர் பகிரங்க மன்னிப்பு கேட்டார். ஆம், 'மூளையின்' மூளை மன்னிப்புக் கேட்டது!

## மூளையின் 'மூளை' மன்னிப்பு கேட்டது!

"முக்கிய நாட்களில் தமிழரசுக் கட்சி கொரடா நாடாளுமன்றத்தில் இல்லை. தொகுதி தேவைகள் பற்றி பேச வாய்ப்புக் கிடைக்காது எம். பீக்கள் தவிப்பு-கடந்த திங்கட்கிழமை ஒருவர் பட்டபாடு-என்ற தலைப்புகளில் 11ந் திகதி தினபதி ஏடு, கட்சிக் கொரடாவான பண்டிதர் இரத்தினத்தின் மீது களங்கம் கற்பிக்கும் நோக்குடன் ஒரு முழுப் பொய்ச் செய்தியை வெளியிட்டிருந்தது. இது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம் உரிமைப் பிரச்சினை ஒன்றைத் தினபதி மீது கிளப்பினார்.

இதையடுத்து தினபதி ஆசிரியர் சபாநாயகரால் தமது கூடத்துக்கு அழைக்கப்பட்டார். திரு. இரத்தினம் ஒழுங்காக பாராளுமன்றத்துக்கு சென்றிருக்கிறார் என்றும் அவர் சபாநாயகரைச் சந்தித்து கட்சிக் கொரடா என்ற வகையில் தமது கடமையைச் செய்வதில் ஈடுபட்டிருந்தார் என்றும் தவறாக செய்தி வெளிபிட்டதற்காக மன்னிப்பு கோரும் படியும் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

இதன்பின் தினபதி ஆசிரியர் செப்டம்பர் 16ம் திகதி தினபதியில் மேற்கண்ட செய்தியில் காணப்பட்ட தவறுக்கு வருந்துவதாகவும், சபாநாயகரிடமும், சபையிடமும் மன்னிப்பு கோருவதாகவும் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இதுமட்டுமல்ல - உள்ளூராட்சி அமைச்சரின் நிதி ஒதுக்கீடு பாராளுமன்றத்தில் குழுநிலையில் ஆராயப்பட்ட போது கிளிநொச்சி எம். பீ. திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் சபாநாயகர் திரு. ஷேர்லி

(9ம் பக்கம் பார்க்க)

தமிழ் மக்களுக்கு மற்றோர் அடி!

## தமிழ்பட வெட்டுக்கு சட்டம் வருகிறது!

தமிழ் பேசும் மக்களினதும். தமிழ்ப்பிரதிநிதிகளினதும், எதிர்ப்புக்கு மத்தியில் தமிழ் மக்களின் கலாசார உரிமையைப் பறிக்கும் சட்டமொன்றை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்து விட்டது. தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்ப் படங்களில் ஆக மூன்றே மூன்று பிரதிகளை மட்டுமே தருவிக்கலாம் என்பதே அரசாங்கம் கொண்டு வரவிருக்கும் சட்டமாகும்.

தமிழ்ப் படங்களின் இறக்குமதியை மூன்று பிரதிகளாக குறைக்கும் யோசனைக்கு தமிழரசுக் கட்சியும், தமிழ் பேசும் மக்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவது தெரிந்ததே.

## தமிழ் காங்கிரஸ் முடிவு

தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை முன்பு ஒப்புக்கொண்டிருந்த அரசாங்கம் அதிலிருந்து இப்போது குத்துக் கரணமடித்து விட்டது!

கொழும்பு பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனத்தில் தேசிய உயர் கல்விச் சபையும் அரசாங்கமும் சேர்ந்து இன அடிப்படையில் பாரபட்சம் காட்டி திரு. மயில்வாகனத்தை உதைத்து தள்ளி விட்டது.

தமிழ்ப் பகுதியில் பூரணத்துவம் பெற்ற பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்ற தமிழ்ப் பிரதிநிதிகளின்கோரிக்கையை கல்வியமைச்சர்காலில் போட்டு மிதித்துவிட்டார்"

—இவ்வளவும் நடைபெற்று முடிந்ததும், இவற்றையெல்லாம் பூசிமெழுகி விட்டு தொடர்ந்து யூ. என். பியுடன் ஒட்டிக் கொண்டிருப்பது என்ற தனது கொள்கையை தமிழ் காங்கிரஸ் மீண்டும் ஊர்ஜிதம் செய்திருக்கிறது.

வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது கல்வியமைச்சின் மானியம் மீது பேசிய வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அமிர்தலிங்கம், போதனாமொழிப் பிரச்சினையில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே போதனா மொழியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் முன்பு ஒப்புக் கொண்டிருந்தது என்றும், கல்வியமைச்சர் அந்தக் கொள்கையில் இருந்து விலகிச் செல்ல இப்போது முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

அப்போது குறுக்கிட்ட திரு. பொன்னம்பலம், தமிழ்ப்பிள்ளைகளுக்கு அவர்களது தாய்மொழியே போதனா மொழியென்ற கொள்கை ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது என்றுகூறிய போது கல்வியமைச்சர் இடைமறித்து, அக்கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஒரேயடியாக மறுத்திருந்தார் இதேபோலவே பிரதமரும் முன்பு சபையில் கூறியிருந்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்



கே.எஸ்.ஆனந்தன்

# கர்ப்பக் கிருகம்

## அத்தியாயம் (4)

மாலை வெய்யிலின் செம்மஞ்சள் நிறம் கடற்கரையை பொன்னொளி பிரவாகத்தில் திகழச் செய்தது. சனிக்கிழமையாகையால் ஓரளவுக்கு சனசந்தடியாக இருக்கவே பிரகாஷ் கரையை விட்டு ஒதுங்கிச் சற்று அப்பால் சென்று ஒரு தென்னை மரத்துடன் சாய்ந்து கொண்டு இருந்தான்.

அவன் மனம் ஓரளவு சாந்தி பெற்றிருந்தது. காலையில் புனிதம் வீட்டு வேலைக்காரப் பெண் கொண்டுவந்து கொடுத்த கடிதம் அவனை ஓரளவுக்கு மாற்றிவிட்டதென்றே கூறவேண்டும்.

புனிதம் வீட்டு வேலைக்காரப் பெண் வந்தபோது தான் பட்ட அவஸ்தையும், ஏக்கமும் நினைக்கவே அவனுக்குச் சிரிப்பு வந்தது.

என்னங்க ஐயா நான் சொல்வது என்னென்னால் அம்மா ஒரு கடிதம் தந்து உங்களிடம் கொடுக்கச் சொன்னாங்க'' அந்த ஒரு விடயத்தை அவள் சொல்வதற்கிடையில் என்னவோ ஏதோ என்று தான் பதறியதைக் கண்டு அந்த வேலைக்காரப் பெண்ணே சிரித்துக் கொண்டு சென்றாள்.

அந்தக் காட்சியை நினைக்கும் பொழுது அடிக்கடி அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவளுக்கு அதாவது புனிதத்துக்கு என்னதான் வந்தால் அவனுக்கு என்ன. ஒருவனுக்கு மனைவியாகப் போகின்றவள் புனிதம். அதன்பின்பு அவளுக்குவருவதெல்லாம் கணவனுக்கே உரிய ஒன்று. அப்படியான நிலையில் உறவோ, உரிமையோ இல்லாத அவளுக்காக அவன் ஏன் துடிக்க வேண்டும்?

இவற்றை பிரகாஷ் உணராமல் இல்லை. ஆனாலும் உறவு, உரிமை என்பவற்றிற்கு அப்பாற்பட்ட ஓர் மகா ரகசியம். உறவு, பந்தம் என்ற முறையில் அன்பு செலுத்துவது உண்மையான அன்பாயிருக்காது. அது எல்லாம் ஓர் காரணமாக வந்தது அதற்கு மேல் எல்லாம் கடந்து ஏற்படுகின்ற அன்பு இருக்கே அதுதான் பாசம். அந்தப் பாசம் பல காலப் பழக்கத்தால் இல்லைபார்த்த உடன் கூடத் தோன்றிவிடும். பார்க்காமலே பிறந்து விடக் கூடியது.

இத்தகைய ஒரு நிலைதான் பிரகாஷ்-புனிதம் இடையே மலர்ந்த பாசம். ஆனால் மனித மனம்; தான் சிலவற்றை வைத்து அனுபவிக்க விரும்புவது இயற்கைதானே ஆனால் அது வேறு ஒருவனைக்கு மாறுகின்றது என்று தெரிந்தும் அதன்மீது பாசமறுவற்ற ; ஓர் உன்னத பற்றை ஏற்படுத்திப் பூஜிக்கின்றோம் அல்லவா இது தான் உண்மையான அன்பு காதல், எல்லாம்.

ஆனால் இன்று காமம் என்ற வெறி உணர்வுக்கு காதல் என்று முலாம்பூசி கயமைத்தனம் கொண்டாடுபவர்களே மலிந்து விட்டனர்.

'ஒருவித வெறி உணர்ச்சிக்கு காதல் என்ற முலாம் பூசி பகுத்தறிவு பெற்ற மனிதவர்க்கம் அதை ஒரு கட்டுத்திட்டத்திற்குள் அடக்கி வைத்திருக்கிறது' என மாப்பஸான் கூறிய கருத்தை நினைத்த பிரகாஷ் ஒரு முறைக்கு பலதடவை அவற்றை மீண்டும் மீண்டும்நினைவு கூர்ந்து தெளிந்தான்.

'சார்' அருகே கேட்ட மென்னொலி அவன தனிமையை நிலைகுலையச் செய்யவே நிமிர்ந்தான்.

'ஓ நீங்களா?'

'ஜேஸ் சார், நான் உங்களுக்குத் தொந்தரவுகொடுக்கின்றேன் என நினைக்காதீர்கள். பிளீஸ் நான் நேற்றுக் கேட்ட விடயம் பற்றி......'' முடிக்காமலே நிறுத்தினாள் கீதாஞ்சலி.

''மிஸ்... உங்கள் பெயரைககூட மறந்துவிட்டேன்... வந்து...''

'கீதாஞ்சலி'

'ஓ... ஜெஸ்... கீதாஞ்சலி. நீங்கள் சிறுபிள்ளையல்ல நான் உங்களுக்கு ரியூசன் சொல்லித்தர, நானும் இளவல். நீங்கள் பருவப் பெண். அப்புறம் ஊரவர்கள் கண்டபடி ஏதும் கதைக்க இடம் வைக்கக் கூடாது பாருங்கள்.. ஆகவே...''

'சார் அதோ அக்காவே வந்துவட்டார்கள். உண்மையில் எனக்கு... கொஞ்சம் மனம் வைத்து......சார்,...... நான்...'

அவர்களுக்கிடையே சுவர்ணவும் வந்து சேர்ந்து கொண்டாள். சுவர்ணவிடம் கீதாஞ்சலி காலைலேயே தன்திட்டததைக் கூறியிருக்கின்ருள். அவள இஸ்டடபடி ரியூசனுக்கு வேண்டியதெல்லாம். செய்வதாக அக்காளும், அவள் கணவனும் சம்மதம அளித்து விடடதுடன் அக்காளே நேரடியாக அங்கு வந்துவிட்டாள்.

சுவர்ணு வந்ததும் வராததுமாக ''உங்களைப் பற்றி கேள்விப்பட்டோம். மறுககாமல் இந்த உதவியைச் செய்து தரவேண்டும். இது தான் கடைசித்தடவை......' என்ருள்.

'சரி...சரி...ஆனல்...'

'சம்பளம்தானே நீங்கள் கேட்டபடி தரலாம்''

''சம்பளம் பற்றி சொல்லவரவில்லை. மாலையில் தான் நேரம் கிடைக்கும்'' என்ருன்.

''ஆல்ரைட் சார்'' என்று கூறிவிட்டு இருவரும் சென்றனர்.

சட்டைப் பக்கட்டிலிருந்த புனிதத்தின் கடிதத்தை எடுத்துப் படிக்கவேண்டும் போலிருந்தது பிரகாஷிற்கு. உடனே கடிதத்தை எடுத்து சில குறிப்பிட்ட இடங்களை மட்டும் படித்தான்.

''உங்கள் மனம்போல என்னை விட அழகான மனைவி ஒருத்தி கிடைப்பாள். உங்களிடம் நான் வைத்த அன்பு அழியாத உண்மை அன்பு. ஆகவே நான் உங்களை கணவன் ஸ்தானத்தில் வைக்கவில்லை. நினைவு இருந்தது ஆனாலும் கண்ணனை வழிபட்டு அவனையே மணாளனாகக் கொண்ட கோதையல்லவே நான். நான் வெறும் புனிதம். ஓர் சாதாரண பெண். தாங்கள் பூஜிககத் தகுந்தவரேயன்றி...பிரகாஷ் உண்மையில் என்னுள்ளத்துள் வாழும்-நான் பூஜிக்கும் தெய்வம் நீங்கள். பலனின்றி அன்பு. செய்வதும் உதவுவதும், தெய்வம் என்று அறிந்தேன். ஆனல் மனித உருவில் தெய்வமாக உங்களைச் சந்தித்தேன். ஆட்பட்டு விட்டேன். என் அன்பு புனிதமானது. நான் உங்கள் மீது கொண்ட காதல் சாதாரண காதல் அல்ல அளவிடற்கரிய பக்தியே!

அவளுடைய கடிதத்தின் ஒரு பகுதியை வாசித்த பின்பு கீழே உள்ள பந்தியையும் அவன் கண்கள் வலிந்து சென்று பார்த்தன.

வெறும் ஆடம்பரத்துக்கும், பதவிக்கும் என்னை அடிமையாக்கி விடவில்லை. என்னைத்தன் உதிரத்தில் வைத்துப் பேணிப்பாதுகாத்து வளர்த்த அன்னைக்குச் செய்யும் நன்றிக் கடனாக என்னை நான் தாரை வாக்கின்றேன். ஆனல் கணவனாக வரப்போகின்ற வரை ஏமாற்றவில்லை. அவர் என் கணவர். கணவன் தெய்வம் என்று கூறுகின்றார்கள். எல்லோரும் அப்படி எண்ணத் தகுந்தவர்கம்...என்பது ஆராய்சிக்குரிய விடயம். அவர் எப்படிப்பட்டவராலுலும்ஒத்து வாழ்வதுஎன்கடமை, ஆனல் தங்களுக்கு உரிய இடம் என் இதய பீடத்தில் என்றும் புனிதமாகவே இருக்கும்.

உங்களை என்றும் மறக்க முடியாத

புனிதம்.

நமது தொடர்கதை

அவன் விழிகளில் நீர் சுரந்தன. இதயவாசலில் ஆயிரம் பேர் வருவார். அயிரம் பேர் போவார்: எல்லோருமா நிலைத்து நிற்கின்றனர்? ஆயிரத்தில் ஒருவராவது நிலைத்து நிற்பது அபூர்வம் தான். ஆனல் ஆயிரத்தில் ஒருத்தியாக அல்ல லட்சத்தில் ஒருத்தியாக, கோடியில் ஒருத்தியாக தன்னை நிலைநிறுத்தச் செய்து விட்டாள் புனிதம்.

இரவு எட்டுமணிவரையில் அந்த இடத்திலேயே தன்னை மறந்த நிலையில் அப்படியே உட்கார்ந்து விட்டான் பிரகாஷ்.

அதே வேளையில் யாழ்நகரில் புனிதத்துக்கு திருமணப் பதிவு முடிந்து விருந்து நடந்து கொண்டிருந்தது. புனிதத்தின் கணவன் சுந்தரேசன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவனைப்பார்த்ததும் புனிதத்தின் நினைவு அலை சுழன்றது.

மனிதமனம் ஒரு குரங்கு என்று அறியாமலா சொன்னார்கள். எவ்வளவு தான் மனதை அடக்கியாண்டாலும் அது தாவிப்பாய்ந்து விடுகின்றது.

நாட்கள் பல நகர்ந்து விட்டன. மாதம் கூட ஒன்று ஆகிவிட்டது பிரகாஷ் ரியூசன் ஆரம்பித்து, அன்று கீதாஞ்சலி' ஒருமாதம் முடிந்ததுசார் உங்கள் பீஸ்' என்ற போது பிரகாஷிற்கே ஒரு மாதம் எவ்வளவு கெதியாகப் போய் விட்டது. என்று நினைப்பு எழுந்தது.

ஆரம்பத்தில் பாடங்கள் படிக்கும் போது ஒரு மாணவிக்குரிய பயபக்தியுடன் தானிருந்தாள் கீதாஞ்சலி. ஆனல் நாளுக்கு நாள் அவள் உரிமையோடு பழக ஆரம்பித்திருந்தாள்.

சிறுவயது முதலிலே செல்லமாக வளர்ந்து விட்டவள் கீதாஞ்சலி. அவள் ஒன்றை அடைய வேண்டும் எனத் தீர்மானித்துவிட்டால் எப்படியேனும் அதை அடையாமல் விட மாட்டள்.

அதேவழியில் முதல் ரியூசன் மாஸ்டர் என்றளவில் பிரகாஷை அணுகி அவனுடைய அன்பைக் கவர்ந்து விட்டாள். 'சார் சார்' என்று எடுத்தற்கெல்லாம் சிறுபிள்ளை போல குழைந்து அவனுடன் வேற்றுமையின்றிப் பழக ஆரம்பித்திருந்தாள்.

ஆரம்பநாட்களில் சற்று ஒதுங்கியவன் அவளை வெகுளி எனவே எண்ணிவிட்டான். அவளுடைய இனிய சுபாவம், காந்தம் போல மற்றவர் மனதை வசீகரிக்கும் கள்ளவிழிகள. அவன் உள்ளத்தின் உறுதியை குலைத்து விடும் அம்புகளாகப் பாயும் அவள் பார்வையை நேருக்கு நேர் சந்திக்கக் கூசினன்.

புனிதத்துடன் ஒப்பிட்டு நோக்குகையில் புனிதத்தின் குணஇயல்புகள் இவளிடம் இருக்கவில்லை என்பது உண்மை. ஆனல் உடலழகைப் பொறுத்தமட்டில் புனிதத்திலும் மேம்பட்டு விளங்கினுள். ஆனல் புனிதத்தின் முகத்தில் இல்லாத ஒரு சோகம், ஏக்கம், முகத்தில் தோன்றி அவளை ஓர் தொற்று நோய்க் காரி போலக் காட்டிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் மாலை அவள் அக்கா சுவர்ணு வீட்டில் இல்லாத வேளை. ரியூசனுக்காக பிரகாஷை எதிர்பார்த்து இருந்தாள கீதாஞ்சலி.

மாலை ஐந்தரை மணிக்கு சோர்வுடன் வந்து சேர்ந்தான் பிரகாஷ். வேண்டும் என்றேதன்னை அலங்கரித்துக் கொண்டவள் போன்று எழிலுடன் காட்சியளித்தாள் கீதாஞ்சலி.

அவளை ஓர் கவிஞன், அல்லது எழுநதாளன் அந்தத் தோற்றத்தில் கண்டிருந்தால் ஓர் காவியமே தீட்டியிருப்பான். கந்தர்வக்கன்னியோ, பனிப்பதுமையோ என்று சொல்ல முடியாது விளங்கியது அவள் தோற்றம்.

அவளைப் பார்த்த மாத்திரத்தில் ஓர் கனவை போன்று தன் மனதில் தோன்றிய இனிய கற்பனைக் களிப்பில் மிதந்து விட்டான் பிரகாஷ். மறுகணம் தன்னை சுதாரித்துக் கொண்டான்.

அவள் தன்னுடைய மாணவி தான ஓர் ஆசிரியன் என்ற நினைவு வந்ததுமே ரசனைக்கு வேலி போட்டுக் கொண்டே மனதில் உறுதியைவரவழைத்துக் கொண்டான்.

மனிதன் முயன்ருல் தேவனுகலாம். ஆனல் அவன் தேவனல்லன், சமூகத்தின் ஊழல்களை அதிகரிக்கும் நஞ்சுக்கிருமிகளே டுகிருமிகளாகச் சேராமல் ஒழுககத்தின் பால் தமது மன உழைச்சல்களைக் களைந்து விட்டு திருந்தி நடக்க முற்படலாம். ஆனல் இயற்கையின் உணர்வு மனிதனின் மனதை சலனப்படுத்தாதிருக்க முடியாது.

மின்னல்மின்னுவதையோ, முழக்கம் முழங்குவதையோ, மழை பெய்வதையோ, தடைப்பண்ணிவிட முடியுமா? அதே போல மனித மனதில் இயற்கையாகத் தோன்றும் உணர்வுகளின் தோற்றத்துக்கு தடைவிதித்து விட முடியுமா?

பிரகாஷ், முற்றும் துறந்த முனிவனே, அன்றி வாழ்க்கையை வெறுத்து விட்ட ஞானியோ அல்லன். அண்டமா முனிவர்களே' அடங்கி விட்ட சிற்றின்பக் குளத்தில் சாதாரண பகுத்தறிவாதியான பிரகாஷ் முன்—பின் சிந்தனையுடன நடக்க முற்பட்டாலுயினும், அளவுககதிகமாக அவள் செய்த உபசரணைகளால், பணிவுகளால், அவன் மனதில் இல

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'தமிழரசு'
கரவெட்டி

கே; தமிழ் காங்கிரஸ் கட்சியின் கொள்கை அன்றும் இன்றும் ஒற்றையாட்சி அரசியலமைப்பா?

ப: ஒற்றையாட்சி அரசியலமைப்பை எதிர்ப்பதற்காக ஆரம்பிக்கபட்ட இயக்கமே தமிழ் காங்கிரஸ். என்று பொன்னம்பலம் மந்திரிப் பதவிக்கு ஆசைப்பட்டு எதிர்ப்பைக் கைவிட்டுபெரிய சேனநாயகாவின் தாள் பணிந்தாரோ அன்றே தமிழ் காங்கிரசைக் கலைத்து விட்டிருக்க வேண்டும். ஏனெனில் ஒற்றையாட்சி கொள்கையை ஆதரிக்கும் ஒரு அரசியற்கட்சி தமிழர்களுக்கு தேவையில்லை. சுதந்திரம் பெற்ற நாள் முதல் இன்று வரை இந்நாட்டிலிருந்து வரும் அரசியற் திட்டம் ஒற்றையாட்சித் திட்டம் தானே!

ஃ

திருமதி. பு நாகலிங்கம்
மாதகல்.

கே: டட்லியின் அரசியல் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: 1970ம் ஆண்டு தெரியும்!

கே: படித்த பெண்ணிலும் படிக்காத பெண்ணிலும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: படித்தபெண் நகரத்திலிருக்கும் குழாய் நீர்; படிக்காதவள் நாட்டுப் புறத்தில் ஓடும் அருவி நீர்.

ஃ

க ' தையா
கல்வியங்காடு

கே: கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை சங்கிலியம் என்னும் காவியத்தில் சங்கிலியனை ஒருவிடு தலை வீரனாகவும் நல்ல பண்புள்ளவனாகவும் படைத்திருக்கிறார். இதை நீங்கள் ஒப்புகின்றீர்களா?

ப: காவியத்தலைவனை ஓர் சிறந்த வீரனாகவும், நற்பண்புகளின் உறைவிடமாகவும்சித்திரிப்பது தமிழ் மரபு, அந்த மரபை யொட்டியே சங்கிலியனை கவிஞர் சுந்தரம்பிள்ளை படைத்திருக்கிறாரென்பதே எனது கருத்து—

ஃ

சன். தருமநாதன்
வடஅல்வை

கே: காவலூரில் கா. பொ. இரத்தினம் வெற்றி பெறவும் நவரத்தினமதோற்று ஓடவும் கனவு கண்டேன். இதுகனவாகுமா அல்லது நனவாகுமா?

ப: நனவாகும்கனவுகளைத் தான் காண்பது உங்கள் வழக்கமோ!

கே: ஜி. ஜி. வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டென்ன! விட்டென்ன என்ற முடிவுக்குவந்து விட்டாராம். இது உண்மைதானா?

ப: எங்கு திரும்பினாலும் தோல்வி தோல்வி என்று அவரது உள்ளமே எதிரொலிப்பதால் எந்தத் தொகுதியில் போட்டியிட்டு தோற்கலாமென்று இப்போது இரவு பகலாக ஆராய்ந்து வருகிறாராம்!

ஃ

ஐ. நடேசன்
நெல்லியடி

கே: தமிழ் காங்கிரஸ் பத்திரிகை 'கோவை' யை மட்டும் திட்டுகிறதேயன்றி 'கோவை' எழுதி வரும் பொன்னரின் கோயபல்ஸ் பல்டியை மறுக்காததேமே?

ப: உண்மைகளை எடுத்துக் கூறினால் அவற்றை மறுப்பதற்கு அவர்களுக்கு தைரியமேது? அதனால் உடலெல்லாம எரிகிறார்கள். இழிமொழிகளால் வைகிறார்கள், இவற்றால் அழிந்துபோகும் தமிழ் காங்கிரசை காப்பாற்றி விட முடியுமா என்ன?

ஃ

பொன் கதிரவன்
அல்வாய்,

கே: 'தோழர் என்னும் சொல் தனியுடமை என்று நினைக்கும்முட்டாள்களைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் யாதோ?

ப: அதுதான் நீங்களே கூறிவிட்டீர்களே முட்டாள்கள் என்று. தோழர்என்ற சொல் பாசத்தை உணர்த்தக் கூடியது. எந்தக்கட்சியினரும் பயன்படுத்தக் கூடியது!

நா. கந்தையா
ஒட்டமாவடி

கே: கட்டிய பெண்ணை காப்பாற்ற வகை தெரியாது மாற்றான்கையில் கொடுத்து விட்டு வேற்றுப் பெண்ணைத் தேடி கல்முனை சென்று மூக்கறுபட்டு தற்பொழுது இரு பெண்களை வடக்கிலும் கிழக்கிலும் காதலிப்பதாக சொல்லப்படும் சுந்தரின் நிலைமை என்ன வாகும்?

ப: மூதூர்ப் பெண்ணும் இவருக்கு பட்டை நாமம் தீட்டியதை மறந்து விட்டீர்கள் போலும். இப்போது மட்டுமென்ன? கற்பிழந்த அவரை யாரும் அணைத்துக் கொள்ள மாட்டார்கள் அடித்து விரட்டுவார்கள்!

ஃ

ஆ. தி. இராஸ்,
சதர் லேண்ட்
எல்ல'

கே: தனிப் பெருந்தலைவரும் தொண்டமானும் சேர்ந்து கொண்டு தொழிலாளர்களுக்கு கிடைக்கும் நன்மைகளைத் தடை செய்கிறார்களே. இவர்களின் பிற்போக்குத்தனத்தை உடைத்தெறிய வழியென்ன?

ப: முதலாளித்துவத்தின் எடுபிடிகளான இவர்களைத் தலைமைப் பதவியிலிருந்து தூக்கி எறிந்து விட்டு உண்மையான தூய்மை நிறைந்த தலைவர்களை தொழிலாளர்கள் பின்பற்றுவதே இதற்குள்ள ஒரே வழி.

ஃ

இராசதுரை
உடுவில்.

கே: நாவேந்தன் உடுவில் தொகுதியில் போட்டியிட்டால்......?

ப: தாய்சுட்ட இரும்பிப் பாராது! ஏனெனில் அது நன்றியுள்ளது!

'மாலினி'
கரவெட்டி

**கே: 1961 ம் ஆண்டு தமிழரசுக்கட்சியின் உரிமைப் போராட்டத்தை உடுப்பிட்டி சிவசிதம்பரம் ஆதரித்து கலந்து கொண்டாரா?**

ப: அப்போராட்டத்தில் அழையா விருந்தாளியாக அவர் வந்து கலந்து கொண்டது உண்மை. ஆனால் இன்று அவர் தமிழரசுக் கட்சியின் மீது காட்டும்வெறுப்பையும் ஆத்திரத்தையும் பார்க்கும்போது அப்போராட்டத்தில் கலந்து கொண்டது நல்லெண்ணத்திலா அல்லது காட்டிக் கொடுத்து அப்போராட்டத்தை முறியடிக்கவா என்ற ஐயம் எழுகிறது. அப்போராட்டத்தில் கலந்துகொண்டவர்களும்—போராட்டத்தினை ஆதரித்தவர்களுமாகபலர் தடுப்புக் காவலில்வைக்கப்பட்டனர். சேர் கந்தையாவைத்திய நாதன்—அப்போது தமிழ் காங்கிரசில் சேரா திருந்த வவுனியா சிவசிதம்பரம்—போன்ற தமிழரசுக்கட்சியைச் சேராத பலர் சிறைப்படுத்தப்பட்டனர். ஆனால் உடுப்பிட்டியார் மட்டும் அன்று கைது செய்யப்படவுமில்லை, தடுப்புக்காவலில் வைக்கப்படவுமில்லை, இது போராட்டத்தை காட்டிக் கொடுத்ததற்கு கிடைத்தபரிசா என்று கூட சந்தேகம் எழுகிறது. அதுமட்டுமல்ல—இவர் உபசபாநாயகராக தெரிவு செய்யப்படுவதற்கு சுதந்திரக் கட்சியும் எதிர்ப்பின்றி ஆதரவு தெரிவித்ததென்பதும் குறிப்பிடத்தக்கது.

எம். ஐ. நாதன்
முள்ளியவளை.

கே: தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை வேண்டும் என்று உபசபாநாயகர் கூறியிருக்கிறாரே!

ப: ஆமாம், அடுத்த தேர்தலில் உடுப்பிட்டித்தொகுதி தம்மை உதைத்து தள்ளிவிடும் என்பது அவருக்கு உள்ளூரத் தெரிகிறது, தேர்தலில் தோற்று விட்டால் எப்படி 'சபாநாயகர்' கனவு நிறைவேறும்? எனவேதான் தமிழரசாருடன் ஒருதேர்தல் உடன்படிக்கை செய்தாவது 'தேர்தல் ஆபத்தை' கடந்துவிட ஆசைப்படுகிறார்! பரிதாபம்!

ஃ

க. இராமநாதன்
சுன்னாகம்.

கே: நாவேந்தனின் விலை என்ன?

ப. முதலில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசம், அடுத்து இடமாற்றம் இரத்து, இப்போது இருபத்தைந்து சதம்!

கே: ஒருவரைக் காக்காய் பிடிக்கக் கூடிய விதமாக ஒரு கட்டுரை எழுத விரும்புகிறேன். எப்படி எழுதவேண்டுமென்று சற்று விளக்குவீர்களா?

ப: தினபதி ஆசிரியரிடம் கேட்டுப்பாருங்கள். காக்காய் பிடித்துக் கட்டுரை எழுதுவதெப்படி என்பதை அவரே சரியாக விளங்கப் படுத்துவார்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.




# இன்பம்

மங்கலப் பூக்கள் மலிந்த முகிலொடு
குங்குமம் வைத்த குளிர்நிலா நின்றது!
பெண்மை அழகே அழகெனும் அப்பெரும்
உண்மை அறிந்தான் ஒருவன் விழிகளில்
தெய்வம் எனஇளந் தேவி நிறைகிறாள்!
அண்ணலை நோக்கும் அவாபெரி தாயினும்
மண்ணையே நோக்கும் மணிவிழிப் பார்வையும்
செம்மலைத் தீண்டத் துடிப்பன வாயினும்
தம்மையே தாம்பிசைந் தாடும் விரல்களும்
வீரன் உடல்கொளும் வேட்கையே ஆயினும்
தூர ஒதுங்கித் துவளுமோர் மேனியும்
கோடிக் கதைகளைக் கூறத் துடிப்பினும்
மூடிக் கிடந்திடும் மோன இதழ்களும்
தங்கச் சிலைமுகம் தாங்கும் வியர்வையும்
சங்குப் பெருகால் விரல்தரை ஊர்தலும்
ஓங்குசீர்க் காஞ்சித் தலைவன் விழிகளால்
வாங்கிச் சுவைத்துச் சுவைத்து மலர்கிறான்!
கண்ணகி தோற்றம் கதையிலே கண்டவன்
இந்நாள் அவளை எதிரெதிர் காண்கிறான்!
கற்பெனும் பேரெழில்... காஞ்சியின் அரசி...
ஒப்பிலாச் செந்தமிழ்ப் பண்பின் திருவுரு...
பெய்யென வான்மழை பெய்யப் பிறந்தவள்...
செய்தவம்... பெண்ணார் சிறப்புக் குரைகல்...
ஒழுக்கம் எனுமுயர் பண்புக் கொருத்தி...
விளக்கு... தமிழர் அகப்பொரு ளின்வேர்...
சிறுமாட வண்ணப் புறுவென ஆங்கே
மறுகுதல் கண்டோன் மயங்கி அவள்கரம்
பற்றுகின் றான்தடந் தோள்கள் பருக்கவே!
முன்னாள் பலநூல் பிடித்ததன் கைகளால்
இந்நாள் இடைநூல் பிடிக்கும் இளைஞனின்
உள்ளக் களிப்பும் உரைத்தல் இயலுமோ?
வள்ளுவன் என்பான் குறளில் வரைந்ததோர்
காமத்துப் பாலின் அழகெலாம் இந்தநாள்
சாமத்தே கண்டான் தலைவன்! ஒருதமிழ்ப்
பெண்மையில் தோய்ந்தும் பெருமகள் கற்பெனும்
திண்மையில் ஆடித் திளைத்தும் வெறிகொள்
புலியெனப் வீரத் தமிழ்ப்பொறி சிந்தும்
உலையெனப் புத்தம் புதிதாய் உயிர்த்தான்
வீங்கும் தடந்தோளான் வீரன் ஒருவனைத்
தாங்குபுகழ் கொண்டு தமிழ்மண் சிலிர்த்ததே!

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

லேபிள்களை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# வேடம் கலைந்தது!

யூ. என். பி. ஆட்சிபோட்டுக் கொண்டிருந்த தேசிய வேடம் கலைந்து விட்டது. தேசிய ஒற்றுமை, சிறுபான்மை மக்களுக்கு நியாயம் என்றெல்லாம் அடிக்கடி ஜெபம் செய்து வரும் டட்லி ஆட்சியின் சுயரூபம் அம்பலமாகி விட்டது. தமிழினத்தின் உரிமைகளையும் சலுகைகளையும் வழங்க வேண்டும் — தமிழ் பேசும் மக்களுக்கு நீதி நியாயம் வழங்கப்பட வேண்டும் — என்ற அந்தரங்க சுத்தியான ஆவல் ஆளவந்தாரிடம் துளிகூட இல்லை என்பது துலாம்பரமாகி விட்டது. தமிழினத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற நாணயம்—துடிப்பு, பிரதமரிடம் மருந்துக்கும் அற்று விட்டது.

இதற்கு ஆதாரமாக அண்மையில் நடந்த மூன்று நிகழ்ச்கள் சாட்சியம் பகர்கின்றன.

கொழும்புப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவிக்கு விண்ணப்பித்த பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம் சகல தராதரமும் திறமையும் ஆற்றலும் படைத்திருந்தும் கூட—அவர் ஓர் தமிழன் என்ற காரணத்துக்காக தேசிய உயர் கல்விச்சபையாலும், அரசாங்கத்தாலும் உதைத்து தள்ளப் பட்டார். இன அடிப்படையில் நடை பெற்ற இந்த 'ஒதுக்கல்' கொள்கையை அனுஷ்டித்துள்ள டட்லி அரசாங்கத்துக்கு இனியும் தேசிய ஒற்றுமை பற்றி வாய் திறக்க ஏதாவது யோக்கியதை இருக்கிறதா?

தென்னுபிரிக்காவில் கறுப்பன் என்ற காரணம் காட்டி இன ஒதுக்கல் கொள்கையை அனுஷ்டிக்கும் அயன் சிமித் அரசாங்கத்துக்கும் இங்கே தமிழினத்தவன் என்ற காரணத்துக்காக தகுதிவாய்ந்த ஒருவருக்கு நியமனம் வழங்க மறுத்த டட்லி அரசாங்கத்துக்கும் ஏதும் வித்தியாசம் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை இன அடிப்படையில் காட்டப்பட்ட இப்பாரிய பாரபக்ஷம் ஆட்சியாளரின் நிலையைப் படம் பிடித்துக் காட்டிய முதல் சம்பவமாகும்.

இரண்டாவது, போதனமொழிப் பிரச்சினையாகும். சிங்களப் பிள்ளைகளுக்கு சிங்களமும். தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழும் முஸ்லிம் பிள்ளைகளுக்கு மாத்திரம் அவர்களது பெற்றோர் விரும்பும் மொழியும் போதன மொழியாக இருக்கவேண்டுமென்ற கொள்கையை — சகல தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் ஒருமித்த குரலுக்கு செவிசாய்த்து 1966ம் ஆண்டு அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. தமிழினத்தின் உயிருக்குயிரான இந்தக் கொள்கையை—அன்று தமிழரசுக் கட்சி தம்முடனிருந்தபோது ஏற்றுக்கொண்ட ஆட்சியாளர்கள் இன்று அதை பகிரங்கமாக மறுக்கத் துணிந்திருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தில் பிரதமரும் — கல்வியமைச்சரும் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழே போதனமொழியெனும் கொள்கை, அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையென்று குத்துக்கரணமடித்து மறுதலித்திருக்கிறார்கள். தாம் ஏற்றுக் கொண்ட கொள்கையையே மறுதலிக்கத் துணிந்த சந்தர்ப்பவாதிகளான ஆளுங்கட்சியினரை — இந்நாட்டில் தவிர வேறு எங்குமே காண முடியாது.

தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழே போதனமொழியாக இருக்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது என்றால் என்ன அர்த்தம்? தமிழினத்திடம் சிங்களத்தைப் போதனமொழியாகத் திணிக்க முயலுகிறது என்று பொருள். தமிழினத்தைப் படிப்படியாகச் சிங்களவர்களாக்கத் திட்டம் தீட்டுகிறது என்று அர்த்தம். தமிழ்ப் பிள்ளைகள் தமிழிலே கல்வி கற்க வேண்டுமென்ற கொள்கையை ஒப்புக் கொண்டுவிட்டு இன்று மறுக்கும் அரசியல் நாணயமற்றவர்கள் இனியும் எப்படித் தேசிய வேடம் போடமுடியும்?

இறுதியாக, தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையாகிய பல்கலைக்கழகமும் தரமுடியாது என்று திமிர்த்தனமாக அறிவித்துவிட்டார் கல்வியமைச்சர். பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றி ஆராய ரோயல் கமிஷன் நியமிக்கப்போவதாக அவர் கூறியிருப்பது வெறுங் கண்துடைப்பு ஆகும். இது பிரச்சினையை ஊறப்போடும் திட்டமாகும்.

கல்வியமைச்சரின் இந்த அறிவிப்பு நமக்கு ஏமாற்றத்தை அளிக்கவில்லை. தமிழினத்தின் முதல் நம்பர் எதிரியாக இன்று விளங்கும் கல்வியமைச்சரிடமிருந்தும் இன்றைய அரசாங்கத்திடமிருந்தும் முழுமைபெற்ற— பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக் கழகமொன்றை தமிழ்பேசும் மக்களுக்காக பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை நமக்கு என்றோ அற்றுவிட்டது.

மாவட்டசபை மசோதா கைவிடப்பட்ட நேரத்தில் திருமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவித்தருவதாகவும் அது இந்த ஆண்டு அக்டோபர் (அடுத்த மாதம்) முதல் இயங்கத் தொடங்கும் என்றும் பிரதமர் தமிழரசாருக்கு வாக்குறுதி அளித்திருந்தார். அந்த வாக்குறுதியும் காற்றில் பறக்க விடப்பட்டு விட்டது; தமிழ்ப்பகுதிக்கு பல்கலைக்கழகம் எதுவும் நிறுவும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது; என்பதை யெல்லாம் நன்குணர்ந்தே தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறியது.

சுதந்திரன் அரசியல் விமர்சகரும் 14. 6. 69 இதழில் பல்கலைக் கழகம் பற்றி பின் வருமாறு எழுதியிருந்தார்:

'நாம் அறுதியிட்டு இங்கு கூறி வைக்க விரும்புகிறோம்—இந்த அரசாங்கம்—இந்துப் பல்கலைக் கழகமல்ல—வேறு எந்தப் பல்கலைக்கழகத்தையுமே தமிழினத்துக்கு வழங்க ஒரு போதும் முன்வர மாட்டாது. அப்படி வழங்கும் என்று எதிர்பார்ப்பவன் ஒன்றில் அரசியல் முட்டாளாக இருக்க வேண்டும்; அல்லது மக்களை ஏமாற்றுவதற்காக அப்படிக் கூற வேண்டும்.

# கருணாநிதி கவனத்துக்கு

## ஈழத்திலிருப்பது மூன்று தி.மு.க. இளஞ்செழியன் தி.மு.க. அண்ணாவுக்கு இழிவு தேடுவது!

## தமிழரசுக்கட்சியே அண்ணாவின் உண்மைஅணி!

ஈழத்தில் யாழ் நகரிலே சென்றவாரம் ஒரு தி. மு. க. மாநாடு நடைபெற்றது. தி. மு. க. என்ற தூய்மையான எழுத்துக்களுக்கே களங்கம் ஏற்படும் வகையில் எதுவித ஏற்பாடுகளும் இன்றி யாழ் நகரில் நடைபெற்ற இம் மாநாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடிய தொகையினரான மக்களே கலந்து கொண்டார்கள். இந்தத் தி. மு. க. வின் தலைவர் இளஞ்செழியன் என்பவராவர்.

யாழ் நகர் மாநாட்டில் ஒரு பயங்கரமான முடிவை இளஞ்செழியன் தி மு. க எடுத்திருக்கிறது. தமிழகத்தில் தி. மு. க. தேடிவைத்திருக்கும் புகழையெல்லாம் நாசம் செய்யும் வகையில் இலங்கையில் அண்ணாவுக்கும் தி. மு. கவுக்கும் சிங்கள மக்களிடையே உள்ள மதிப்பையும் புகழையும் அழித்தொழிக்கும் விதத்தில் இம் மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எதிர்வரும் ஈழத்தின் பொதுத் தேர்தலில் இ. தி. மு. க. 21 தொகுதிகளில் போட்டியிடப் போகிறது என்பதுதான் அத் தீர்மானமாகும்.

தி. மு. க. என்ற பெயரில் தேர்தலில் நின்றால் தமிழகத்தில் அதற்குள்ள செல்வாக்கையும் மறைந்த அண்ணாவின் மரியாதையையும் மூலதனமாக வைத்தே வெற்றிபெற்று விடலாம் என்று ஈழத்திலுள்ள ஒரு சில சுயநலம்பிடித்த பணக்காரர்களுக்கு இப்போது ஒரு சபலம் தட்ட ஆரம்பித்திருக்கிறது. இந்தச் சுயநல மனிதர்களைத் தேர்தலில் இறக்கிவிட்டு அவர் தம் பணத்தையும் பயன்படுத்தி தன்னுடைய தலைமைப் பதவிக்கும் விளம்பரம் தேட முனைகிறார் இளஞ்செழியன். இவர் ஒரு விளம்பர வியாபாரியார் என்பது ஈழத்து மக்கள் எல்லோருக்கும் தெரியும்.

இ. தி. மு. க. என்பது இலங்கை மக்களிடையே கொஞ்சங்கூட அமைப்பு வடிவில் வளராத நிலையிலும் இளஞ்செழியன் அவ்வப்போது பொது வாழ்வில் செய்து வந்த தில்லுமுல்லுகள் காரணமாகவும் (இவர் இலங்கையின் எல்லாக் கட்சிகளின் மேடைகளிலும் காலத்துக்குக்காலம் மாறி மாறி ஏறி ஏறி முழக்கமிட்டவர் செல்வாவின் தமிழரசுக்கட்சி மக்கள் மத்தியில் அண்ணாவின் உண்மைத் தொண்டர்களைக் கொண்ட இயக்கமாக மதிக்கப்படுவதாலும் இளஞ்செழியன் தி. மு. க. தேர்தலில் போட்டியிட்டால் 21 தொகுதிகளிலும் மண்கவ்வும் என்பது மாபெரும் உண்மையாகும்

அந்த நேரத்தில் தி. மு. .க என்ற எழுத்துக்கள் எவ்வளவு அவமானத்தைத் தாங்கும் என்பதை மூளை இல்லாத இளஞ்செழியன் ஏனோ உணர முற்படவில்லை.

ஈழத்தில் இப்போது தி. மு. க. என்றால் சிங்களவருக்கு எரிமலையைப் பார்ப்பது போல் இருக்கிறது 21 தொகுதிகளில் தி. மு. க. தோற்றபின்பு இந்தப் பயம் இருக்குமா? மரியாதை இருக்குமா?

சிற்றூர் ஆட்சி மன்றங்களைக் . கைப்பற்றினோம்—சென்னைமாநகராட்சி மன்றத்தில் கொடி போட்டோம்—சென்னைச் சட்ட சபையைப் பிடித்தோம்—பாண்டிச்சேரியையும் வென்றோம் என்ற பெருமையில் தலைநிமிர்ந்து நிற்கும் தமிழக தி. மு. க. தனிப்பெருந் தலைவன் கருணாநிதியின் தலைமையில் வீறு நடைபோடும் காலத்தில் ஈழத்தில் தி. மு. க. 21 இடங்களில் மண்கவ்வியது என்ற செய்தி எவ்வளவு பெரிய வெட்கக்கேட்டை அண்ணா கட்டி வளர்த்த தி. மு. கவுக்கு ஏற்படுத்தும் என்பதை ஏன் இந்தப் புத்திகெட்ட இளஞ்செழியன் புரிந்து கொள்ளவில்லை?

**"கருணாதாசன்"**

இலங்கையில் மூன்று தி. மு. க உண்டு ஒன்று முன்பு இரா அதியணி அவர்கள் தலைமையில் இயங்கி வந்தது. மற்றது இளஞ்செழியன் தலைமையிலும இன்னொன்று அந்தோனிமுத்து தலைமையிலும் இயங்கின.

இம் மூன்று பிரிவுகளின் இடையிலும் குத்து வெட்டுகள் தோன்றியதும் இரா அதிமணியின் தி. மு. க வை அழிக்கும் நோக்கோடு இளஞ்செழியன் தி. மு. க இரா. அதிமணி ஒரு கள்ளத்தோணி என்று இலங்கை அரசாங்கத்துக்குக் காட்டிக் கொடுத்ததும் இரா அதிமணி நாடு கடத்தப்பட்டதும் நாடறிந்த கதை!

இரா அதிமணியின் வாரிசாக அவரது தி மு. கவுக்கு இப்போது மணவைத்தம்பி தலைவராகி இருக்கிறார். இன்று மணவைத்தம்பி தி. மு. க, இளஞ்செழியன் தி. மு. க, அந்தோனிமுத்து தி மு. க என்று மூன்று உண்டு.

அந்தோனிமுத்து ஈழத்திலுள்ள இந்துக்களெல்லாம் பௌத்தர்களாக மாற வேண்டும் என்று போராட்டம் தொடங்க இருப்பவர். இந்தவகையில் சிங்கள பௌத்த அரசாங்கமான இலங்கை அரசாங்கத்துக்கு வால்பிடிப்பவர்.

இளஞ்செழியன் இலங்கைத் தேர்தலில் போட்டியிட்டு தி. மு. க என்ற பெயருக்கு தோல்வியையும் அவமானத்தையும் எடுத்துக் கொடுக்க இருப்பதன் மூலம் மறைமுகமாக இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புத் தர இருக்கும் துரோகியாவார்!

(9ம் பக்கம் பார்க்க)

திரு. பொன்னம்பலத்துக்கு சுதந்திரன் சவால் விட்டுக் கூறுகிறது—இந்துப் பல்கலைக்கழகத்தை இந்த அரசாங்கம் ஒரு போதுமே வழங்கப் போவதில்லை. ஒரு வருடத்தில் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவி விடுவேன்; அதற்காகவே' அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கிறேன் என்று சமாதானம் சொல்லும் திரு. பொன்னம்பலம் இந்த ஓராண்டு காலத்தில் அது நடக்கா விட்டால் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி விடத்தயாராக இருக்கிறாரா என்று கேட்க விரும்புகிறோம்'

—இவ்வாறு நமது அரசியல் விமர்சகர் அன்று கேட்டிருந்தார். இன்று இந்த அரசாங்கம் தமிழ்ப் பகுதியில் பூரணத்துவம் வாய்ந்த ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ மாட்டாது என்பது துலாம்பரமாகி விட்டது.

தமிழ்க் கட்சிகளிடையே பல்கலைக்கழகம் நிறுவுவதிலே ஒன்றுபட்ட மனப்பான்மை இல்லாததால்தான் அரசாங்கம பல்கலைக்கழகக் கோரிக்கையை தட்டிக் கழித்து விட்டது என்று சிலர் கூறலாம். இது நாம் கிஞ்சிற்றும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். ஏனெனில் திரு. பொன்னம்பலம் இந்து கலாசார பல்கலைக் கழகக் கோரிக்கையை கைவிட்டு தமிழரசாரின் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட பின்னர்—தமிழ்க் கட்சிகளிடையே பல்கலைக் கழகம் பற்றி எவ்வித கருத்து வேறுபாடும் இருக்கவில்லை.

பல்கலைக்கழகத்தை எங்கே நிறுவுவது என்ற பிரச்சினையில் வேண்டுமானால் தமிழ் காங்கிரஸ் கட்சியுடன் பேசி ஒரு சமாதான முடிவுக்கு வரத்தமிழரசுக் கட்சி தயாராக இருப்பதாக பாராளுமன்றத்தில் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

எனவே தமிழ் பல்கலைக்கழகக் கோரிக்கையை கல்வியமைச்சர் காலில் போட்டு மிதித்ததற்கு ஒரே காரணம் —தமிழினத்துக்கு எந்தவித நன்மையையும் செய்ய இந்த அரசாங்கம் விரும்பாததே என்று நாம் பகிரங்கமாக குற்றம் சுமத்துகிறோம்.

தமிழினத்தின் நியாயமான உரிமைகளை வழங்க விரும்பாத ஆட்சிபீடத்துக்கு இன்னும் சிலதமிழ்ப் பிரதிநிதிகள் ஆதரவு அளித்து வருவதுதான் வெட்கமும் வேதனையும் நிறைந்த சம்பவமாகும். அரசாங்கத்துடன் ஒட்டியிருக்கும் [illegible] அரசாங்கத்தை விட்டு வெளியேறி [illegible] ஆட்சியாளருக்கு உணர்த்துவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழரசு இயக்கத்தின் பழம்பெரும் உறுப்பினர்களில் ஒருவரும் துடிப்புள்ள இளைஞருமான ஸ்ரீமுருகன் கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கத்துடன் சிங்கள சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு இருவார காலம் சிறைத்தண்டனையை அனுபவித்தவர். அப்போது வன்னியனிடம் தாம் கண்ட சிறப்பியல்புகளை இக்கட்டுரையில் எடுத்துரைக்கின்றார்.**

# வன்னியருடன் சிறைச்சாலையில் இரு வாரங்கள்

1956 ஆனி ஐந்தாம் நாள் தனிச்சிங்களமசோதா பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்பட்டு சட்டமாகி நடைமுறைக்கு வந்தது. தனிச் சிங்கள சட்டத்தின் பிரதிபலிப்பாக வாகனங்களில் ஆங்கில எழுத்துக்களை அகற்றி சிங்களச் சிறீபுகுந்து கொண்டது, சிங்களச் சிறீ நடமாடத் தொடங்கியதும் தமிழ் காங்கிரஸ் தனிப்பெரும் தலைவர் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தினர். நண்டுக்கால் சிங்களச் சிறீயை இறுதி மூச்சுவரை எதிர்ப்பதாக வீராப்புப் பேசினர் வவுனியா சுந்தரரும், சிங்களச் சிறீயை எதிர்ப்பேன் என முழங்கினர். தமிழ் அரசுக் கட்சியினரும் எதிர்ப்பதாக கூட்டங்கள் நடாத்தினர்.

முப்பெரும் தலைவர்களும் யாழ் முற்றவெளியில் கூடினர்கள். மோட்டார் வாகனங்களில் தமிழ் எழுத்துக்களைப் பொறித்து மோட்டக் கார் ஊர்வலம் நடாத்தினர் இந்த ஊர்வலத்துடன், தனிப் பெரும் தலைவரினதும் வவுனியா சுந்தரரினதும் ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் நின்று விட்டது. ஆனல் தமிழ் அரசுக் கட்சியினர் எதிர்ப்பியக்கத்தை தொடர்ந்து நடாத்தினர்கள்.

1957ம் ஆண்டு மாசிமாதம் 4ம் திகதி அதிகாலை யாழ்ப்பாணம் காங்கேசந்துறை வீதி ஸ்ரீமுருகன்புத்தகசாலையில் ஒரே கூட்டம், திரள் திரளாகத் திரளுகிறார்கள் வாலிபர்கள். இரத்தத்தால் ஒப்பம் இடுகிறார்கள். இரத்தம் சிந்தியும் தமிழ் இனத்தின் இன்னல் தீர்ப்போம் என முழங்குகிறார்கள் சிங்களச் சிறீயை எதிர்ப்போம் சிறைச்சாலையை தவச்சாலை ஆக்குவோம் என்கிறார்கள்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிபர் திரு. கெட்டி ஆராச்சி சிங்களச் சிறீ மொறிஸ் மைனரில் ஓடுகிறார். அதை எதிர்க்க வேண்டும் என்கிறார்கள். இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பது போல் படை திரள்கிறது.

காலை எட்டுமணி ஊர்வலம் சிறைச்சாலையை நோக்கிச் செல்கிறது, மயிலிட்டி, நண்பன், ஸ்ரீ பாஸ்கரன், கொக்குவில் அருணசலம், பருத்துறை வன்னியசிங்கம், யாழ்ப்பாணம் வடிவைநாதன், இரத்தின கோபால், கொட்டடி சிவரத்தினம் ஸ்ரீமுருகன் புத்தகசாலை அதிபர், சிறீமுருகன் முன்னே செல்கிறார்கள்,

சிங்களச் சிறீயை எதிர்ப்போம் சிறைச்சாலையை நிரப்புவோம் எனமுழங்கிக் கொண்டு ஊர்வலம் துள்ளு நடைபோடுகிறது 9 மணி கோட்டை வாசலை அடைகிறது.

சிறைச்சாலை அதிபர் திரு. "கெட்டி ஆராச்சியின்" சிங்களச் சிறீ மொறிஸ் மைனர் வருகிறது. ஸ்ரீ பாஸ்கரன் சிறீமுருகன். அருணசலம் முதலியோர் மொறிஸ் மைனர்முன் விழுகிறார்கள். பொலிஸ் காரர் குண்டாந்தடியுடன் விரைந்து வருகிறார்கள். உயிரைக் கொடுத்தும் மொழியைக் காப்போம் என குரல் எழும்புகிறது; கலைந்து செல்லுங்கள் அல்லாவிடில் நாம்கலைப்போம் என்கிறார்கள் பொலிசார்.

இதற்கிடையில் நிறுத்துங்கள்-நிறுத்துங்கள் என்றொரு சத்தம் கேட்கிறது. படுத்திருந்த நாம் சுற்று நிமிர்ந்து பார்க்கிறோம். தமிழ் காத்த வன்னியனர் வருகிறார். அவருக்கருகில் அப்போதைய யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. சிவபாதம் அவர்களும் நிற்கிறார்கள்.

"வாலிபர்களே உங்களின் உணர்ச்சிக்கும்உரிமைபோரில் நீங்கள் முன்நிற்பதற்கும், சிங்களச் சிறீயை எதிர்ப்பதற்கும் நான் பாராட்டுகிறேன். இந்த விடயத்தை பெரியவர்களாகிய நாங்கள் சிந்தித்து முடிவு செய்வோம். நாங்கள் அழைக்கும்போது போரில் குதியுங்கள். இப்பொழுது இவ்வியக்கத்தை நிற்பாட்டுங்கள் என்று அமரர் வன்னியசிங்கம் கூறினர். வாலிபர்கள் கூட்டம் கலைந்தது. ஆனல் சிங்களச் சிறீ எதிர்ப்பு இயக்கம் தமிழகம் எங்கும் பரவியது. தமிழ் அரசுக்கட்சினரே வழிநடத்தினர்கள்.

1958ம் ஆண்டு மாதம் சரியாக நினைவில்லை—சிங்களச் சிறீ பஸ்கள் ஓடத் தொடங்கிவிட்டன. அண்ணு அமிர்தலிங்கம். செனட்டர் நல்லையா—இன்னும் பல வாலிபத் தோழர்கள் சிறீயை அழித்து சிறை செல்கிறார்கள். சட்டத்தை படித்தவர்கள். சட்டப்புத்தகத்தையே தினமும் புரட்டிப் பார்த்து—சட்ட உதவியால் நீதிமன்றத்தில் வாதாடுபவர்கள். சட்டத்தை மீறினல் சட்டப்படி தண்டனை கிடைக்கும் என்று தெரிந்தவர்கள், சட்டத்தை மீறுகிறார்கள். தமிழன் சரித்திரத்தில் தமிழ் மொழிக்காக முதன் முதல் சிறை சென்றவர்கள் தமிழ் அரசுக் கட்சியினரே;

ஒரு நாள் யாழ்ப்பாணம் பஸ்ராண்டில் ஏகோபித்த சனக் கூட்டம். வன்னியனர் வருகிறார். 'ஸ்ரீ முருகன் இங்கேவா—சிங்களச் சிறீயை அழிப்போம்' என்கிறார், இருவரும் அழித்தோம். பொலிசார் நம்மை ஜீப் வண்டியில் ஏற்றினர்கள். ஜீப் பொலிஸ் ரேசனை அடைந்தது, வாக்குமூலங்கள் பதியப்பட்டன. ஒரு தமிழ் வாலிபர் மோர் கொண்டு வருகிறார், வன்னியனரிடம் கொடுக்கிறார். நான் அரசியல் கைதி, இப்பொழுது உங்கள் உணவு வேண்டாம் என்கிறார், வன்னியர். என்னே வன்னியரின் உள்ளம், உள்ளத் தூய்மையுள்ள உணர்ச்சிமிக்க-சொல்லொடு செயலும் உள்ள தலைவரை இழந்துவிட்டோம், தவிக்கிறோம்.

பின்னர் யாழ்ப்பாணம் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது, நீதிபதி — குற்றவாளியா எனக் கேட்கிறார். கல், தோன்றி—மண்தோன்றாக் காலத்தில் வாளோடு முன் தோன்றி மூத்த வீரப் பெருங்குடியின் வீரவரலாறு வன்னியரின் வாயால் வருகிறது. எல்லாளன் சங்கிலியன் எம்மவர்கள். ஈழத்திருநாட்டில் எமக்குரிமை உண்டு—அருணசலமும் இராமநாதனும் எம் இனத்தவர்கள். உரிமை நிலைநாட்ட சிங்களச் சிறியை எதிர்த்தோம். இப்படி பேசினர் வன்னியசிங்கம்.

வன்னியனரைத் தொடர்ந்து ஸ்ரீ முருகனும் முழக்கமிட்டார். 25 ரூபா அபராதம் இன்றேல் இரண்டு வாரச்சிறை நீதிபதியின் தீர்ப்பு இது—

ஜீப் வண்டி பறந்து வருகிறது—ஏறினேம் ஜீப்பில் கண்கள் கலங்கின.

சிறைச்சாலை சென்று விட்டோம். சிறைச்சாலை உடுப்புக்களை தந்தார்கள் தலைவர் சிறைச்சாலை உடுப்புக்களை உடுக்கிறார். பாய், தலையணை பாத்திரங்கள் எல்லாம் தந்தார்கள்: அவற்றை கையில் எடுக்கிறார் தலைவர். என்கண்கள் கலங்குகின்றது-வேதனை மனதிலே எழும்புகிறது—கலங்காதே ஸ்ரீ முருகன் என்கிறார் தலைவர். இருவரும் செல்கிறோம். தலைவர் தனியறையில் பூட்டப்படுகிறார். நான் எங்கோவில் புகுந்தேன். சிங்களச் சிறீயை அழித்து சிறை சென்றவர்கள் அங்கே இருந்தார்கள். என்னை வரவேற்றார்கள்.

சிறைச்சாலைவைத்தியப்பகுதியில் பிரதம விகிதராகக் கடமை புரிகிறார் வன்னியசிங்கம். மறியல் சாலையை கூட்டும் வேலை எனக்குக் கிடைத்தது தலைவரை காணும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை — நாட்கள் உருண்டோடின—ஒரு ஞாயிற்றுக் கிழமை வந்தது-ஞாயிற்றுக் கிழமை சிறைச்சாலை விடுதலை நாள் தலைவரிடம் ஓடினேன்—சந்தித்தேன் பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கியவர் - வெறும் பாயில் படுக்கக் கண்டேன். என்ன செய்வது தமிழன் தலைவிதியை எண்ணினேன். இருவரும் உரையாடத் தொடங்கினேம்.

கட்டப்பொம்மனின் வரலாறு செக்கிழுத்த சிதம்பரனர் கதை—எல்லாம் சொல்லுகிறார் தலைவர் — உரிமை போருக்கு உணர்ச்சி மாத்திரம் காணுது — உள்ளத் தூய்மை வேண்டுமென்றார்- அவர் அன்று கூறிய சொற்


(9ம் பக்கம் பார்க்க)


# ஆம்-இது உண்மை

**இலங்கையின் பெரிய விவசாய மாவட்டங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இப்பொழுது டேவிட் பிரவுண் ட்ராக்டர்களையே விரும்பத் தலைப்பட்டுள்ளன.**

# என்?

1. ஏனெனில் டேவிட் பிரவுண் ட்ராக்டர்தான் பாதுகாப்பான நிச்சயமான முதலிடு என்பதை அவர்கள் கண்டுகொண்டுவிட்டார்கள்.
2. நெல்வயல்களில் இந்த ட்ராக்டர்கள் ஆற்றிய திருப்பணிச்சேவை, கூடுதல் ஆதாயத்தைப் பெற விவசாயிகளுக்கு உத்தரவாத மளித்திருக்கிறது.
3. நம்பிக்கை வாய்ந்த உழவு இயந்திரமொன்றை சற்றில் அவர்கள் கண்டு பிடித்துவிட்டார்கள்.
4. நீண்டகால சேவைக்கும், நம்பிக்கைக்கும் கீர்த்தி பெற்ற கம்பெனியான ரோலன்ஸ் ஸ்தாபனத்தின் ஆதரவு டேவிட பிரவுணுக்கு கிடைத்துள்ளது.
5. ஒவ்வொரு டேவிட பிரவுண் ட்ராக்டர் விற்பனையோடும் சகவாரியான உப-உறுப்புகள் வழங்கப் படுகின்றது. அததோடு இவற்றின் உப-உறுப்புகள் எப்பொழுதும் கிடைக்கும என்பதற்கு-உத்தரவாதமுண்டு. நாடெங்கும் திறமான விற்பனைக்குப் பின்னர் சேவையும செய்து கொடுக்கப்படுகிறது.



உங்கள் டேவிட பிரவுண வியாபாரியை இன்றே சந்தியுங்கள்.

**ஏ. எம். எம். சுல்தான்**
டிவிஷன் - 1, காத்தான்குடி.

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கம்**
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**பேர்ட்லண்ட் இண்டஸ்ட்ரீஸ்**
பவுர் ஹவுஸ் ரோட், திருகோணமலை.

HOUSE OF ROWLANDS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபுலானந்தர் பெருவிழ

**இரு திங்களுக்கு முன் சைவம் சிலை நிறுவி விழா எடுத்த ஈழத் முத்தமிழ் வித்தகர் — யாழ் நூல் —சுவாமி விபுலானந்த அடிகளு மண்ணுன காரைதீவில் சிலை கிறது. இம்மாதம் 25ந் திகதி கொழும்பிலிருந்து அதிவிமரின கிழக்கு மாகாணத்திலுள்ள பல் கவும் எடுத்துச் செல்லப்பட்டு திகதி காரைதீவில் பெருவிழ சிலையை ஈழத்தின் இளஞ் சி நல்லரத்தினம் செதுக்கியுள்ளார்.**

# விபுலானந்த வாழ்க்கை நெறி

## மு. திருநீலகண்டசிவம் எம்.ஏ

ஈழத்து மண்ணிலே சைவமும் தமிழும் மண்டியிட்டு, மானமிழந்து போன கால கட்டத்தில் அவற்றிற்கு அபயங் கொடுத்து ஈடேற்றி வைத்த அதி உத்தமர் ஆறுமுக நாவலருக்கு மிக அண்மையில் ஈழத் தமிழர் சிலையெடுத்து சீர்பெறும் சிறப்பெய்தினர். சைவத்திற்கும் தமிழுக்கும் வாழ்வளித்த தவப் பெரும் சந்ததியினருக்கு இத்துடன் நம்மவரின் நன்றிக் கடன் தீர்ந்து விட்டதென எவராலும் முடிவு கட்ட முடியாது. பல்முகப்பட்ட பரவலான தமிழ்த் தொண்டும். அறநெறி சால் தவப் பணிகள் பலவும் ஆற்றிய தவத்திரு விபுலானந்த சுவாமிகள் அவர்களைச் சிந்தனையிலும், செயலிலும், சிலையிலும் சீர்பெற இருத்துவதற்கு இன்னும் ஈழத்தமிழருக்குப் பணிகள் பலவுள. தாய்நாட்டுப் பற்றிற்கும், தாய் மொழிப் பாசத்திற்கும் சுவாமிகளின் வாழ்க்கையோட்டம் ஓர் உத்தம எடுத்துக் காட்டாகவும் உறைவிலா ஊற்றாகவும் விளங்க வல்லது. பாரம் பரியமாக நம்மவர்க்கெனப் புறம்பான பாஷை, சமயம், பண்பாடு ஆகியன இருக்கவே இருக்கின்றன என்பதை நம்சந்ததியினர் அறிந்து ஒழுகிவாழ முன்வர வேண்டுமானுல் சுவாமிகளின் பணிகளை உயிர் கொடுத்தும் செயல்படுத்த முன்வருவது அவசியமாகும்.

பல்கலைத்தேர்ச்சியின்மத்தியிலும் தாய்மொழிப்புலமை ஓர் அரிய பெறுபேருகும்: தாய்மொழிப் புலமை சகல புலமைகளுக்கும் ஆதார ஊற்ருக விளங்கவல்லது என்பதை சுவாமிகள் தனது பல்கலைப் புலமையால் எடுத்துக் காட்டியுள்ளார். தாய்ப் பற்று, தன் மொழிப்பற்று, தன்னினப் பற்று, தன் தாயகப் பற்று ஆகிய யாவும் கோர்வைப் பற்றுகளாக உத்தமரின் முத்தாரமா ஒளிக்க வல்லன. இம்முததாரம் தரும் உள்ளொளி பூரண ஆத்ம நிறைவைக் கொடுத்து கர்மயோகிகளை உருவாக்குகின்றது.

மட்டக்களப்பில் குடியேறிய பழங்குடி யாழ்ப்பாணக குடும்பங்களில் சுவாமிகளின் குடும்பமும் ஒன்று. சுவாமிகளின் தாய்வழியினர் உடுவில் வட்டுக்கோட்டைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மட்டக்களப்புக் காரைதீவில் 1892ம் ஆண்டு பிறந்த இவருக்குப் பெற்றோரிட்ட நாமம் மயில்வாகனம். தமிழ்க் கல்வியைத் துறைபோகக் கற்ற வைத்திலிங்கம் தேசிகர் இளைஞருக்குத் திருக்குறள், நன்னூல், சூடாமணி, நிகண்டு, பாரதம், கந்தபுராணம் ஆகிய நூல்களில் பொருத்தமான அறிவையும், பற்றையும் ஏற்படுத்திவிட்டார். அத்துடன் யாப்பிலக்கணம், அணியிலக்கணம் ஆகியவசறின் வல்லபமும் கூடச்சேரவே 12 வயதிலே தமது ஆரம்ப குருவாகிய குஞ்சுத்தம்பியவர்களை வழிபட்டு வாழ்த்த எண்ணி அவரது வயதிற்கு அப்பாற்பட்ட புலமையைத் திரட்டியெடுத்து பாடலொன்றும் பாடிவிட்டார். போற்றத்தகு குருபக்தியையும், வியத்தகு கவிநயத்தையும் உள்ளடக்கிய சுவாமிகளின் கன்னிக் கவிதையை ஈண்டு நினைவுபடுத்தாமற்றிருக்கமுடியாது,

அம்புவியிற் செந்தமிழோ
டாங்கிலமும் எனக்குணர்-
த்தி அறிவு தீட்டி
வம்பு செறி வெண்கலச
வல்லியருள் எனக்கூட்டி-
வைத்த குஞ்சுத்
தம்பியெனும் பெயருடை
யோன்
தண்டமிழன் கரைகண்ட-
தகைமையோன்றன்
செம்பதும மலர்ப்பதத்தைச்
சிரத்திருத்தி எஞ்ஞான்றும்
சித்திப்பேனே:

தென்னகத்திலிருந்து தரிசன யாத்திரை முடித்து வந்த சுவாமிகளின் தந்தையார் அங்கு அக்காலத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய நாவலர் சரிதை, நாவலர் யாத்த நூல்கள் ஆகியவற்றை அன்னாருக்கு தந்து ஆறுமுகநாவலரின் மேதாவிலாசத்தையும் சிறிது சுவாமிகளுக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். அன்று தொட்டு சுவாமிகளுக்கு ஓர் இலட்சிய வழிகாட்டி வந்துதித்துவிட்டார். நாவலரை நெக்குருகி நினைந்து நினைந்த பரவசமடையும் பக்குவ நிலையினையடைந்த சுவாமிகள் பிறருடன் உரையாடும் போதெல்லாம்.

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற் சொல்லு தமிழெங்கே...... என ஆரம்பித்து விடுவார். நாவலர் தமிழ்நடையை வளர்த்தெடுத்த அருமைபெருமையினை உணர்ந்து பரவசமாகிய சுவாமியவர்கள் சொல்லு தமிழெங்கே எனப் பாடும் போது நம்மவரின் மொழிப் பெருமையின் உச்ச உணர்வு தட்டாமலுமிருக்க முடியுமா?

தாய்மொழிப்புலமை வாய்ந்தோர்க்குப் பிறமொழிப்புலமை பிற அறிவுகளில் வித்துவத்தன்மை ஆகியன வாயா என்ற ஓர் தப்பான கருத்து சில வட்டாரங்களில் இன்றும் ஆதாரற்றும நிலவுவதை நாம் அறிந்தாலும் சுவாமிகளின் ஆற்றல் பல்தரப்பட்டது. 16 வயதிற்குள் கேம்பிரிட்ஜ் சிரேட்ட பரீட்சையிலும் 21 வயதிற்குள் கொழும்பு அரசினர் ஆசிரிய பரீட்சையிலும் 24 வயதிற்குள் விஞ்ஞான டிப்புளோமா பரீட்சையிலும், அடுத்த வயதிற்குள் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிலும்திறமைச் சித்திகளுடன் வெற்றிவாகை சூடிக்கொண்டார். ஆங்கில மொழியைத் துறைபோகக் கற்றறிய வேண்டுமென தளரா ஆர்வங்கொண்டுவிஞ்ஞான ஆய்வு கூடங்களில் தான் நடாத்தும் பரிசோதனைகளின் மத்தியிலும் ஆங்கில நாடக வித்தகர் செகசிற்றியரின் நூல்களுள் ஏதாவதொன்று கூடவே உறவாடிக்கொண்டிருக்கும். ஆங்கிலக் கவிதைகளில் சுவாமிகளுக்கு ஆழ்ந்த ஆர்வம். ஆங்கிலக் கவிதைகளின் தனிப்பெரும் சிறப்பியல்புக தமிழ்க் கவிதைகளிலும் சங்கமமாகலாமென்பது சுவாமிகளின் துணிபு:

விஞ்ஞானத்தை மெய்யுணர்வுடன் கற்றுத் தேறுகின்ற ஒருவனுக்கு தெய்வ இயல்பின் பேருண்மைகள்

மிக எளிதில் ஓர் விந்தை பொருளின் நி பெருமளவு விளக்கமும் கூ எழும். எத்து தராதரங்களை தமிழ்மொழி மூச்சு. சுவாமி தில் ஆங்கிலே அற்பசொற்ப களும், அவ கொண்டு ந தமிழர்களிலு போலி உயர்வு படியாக உருக் மது.

தமிழில் கற் பது, அதனைக் முன்வருவது.



பேசுவதே யினைத் தமு கட்டியது வேகங்காட்டி இத்தனை ஆ விஞ்ஞான முமவாய்ந் தன்மானம் ழனுக எதற் முழுமூச்சாக டினுர். 191 சர்வகலாசா சி. பரீட்சை திய வேலை காரருடைய தில் மிக நிறைந்த ப ஏனைய த பார்க்க இ தினை அனுப ஆனுல் இ மிருந்தும் ஆ டங்கள் ம 1922) மா கல்லூரியில் யராகக் கட துடன் "இனிது இ

# தினபதியின் ஈனத்தனமான சேட்டை

திரு. வ. நவரத்தினத்தின் "அரசியற் குழு" தான் எனத் தம்பட்டம் அடிக்கும் தினபதி ஆசிரியர் (பத்திரிகை உலகில் சின்னத்தனத்தின் அவதாரம்) கிளிநொச்சிப் பா. உ. ரும் ஊர்காவற்றுறைத் தொகுதியின் வேட்பாளருமான திரு. கா. பொ. இரத்தினத்தை ஊர்காவற்றுறைத் தொகுதியிலே தோற்கடிக்கச் செய்வதாகச் "சபதம்" எடுத்திருக்கிருராம்.

தமிழரசுக் கட்சியிலிருந்து தாம் பிரித்தெடுத்த தமது "அரசியற் சிடன்" 'அழுகிய' மூளை நவரத்தினத்துக்கு ஊர்காவற்றுறையில் வெற்றி கிடைப்பது முயற்கொம்பு என்று சிலர் உண்மையைக் கூறியதைக் கேட்டவுடன், உருத்தெழுந்த "தினபதி" ஆசிரியர் தனது "தினபதி"ப் பத்திரிகையில் வெளியிடும் பொய்களாலும் புரட்டுக்களாலும் திரு. இரத்தினத்தை இருக்கும் இடம் தெரியாமல் செய்துவிடுவேன் என்று கூறிஞராம். அவருடைய ஊரிலுள்ள ஒரு "பொடிப்பயலைக்" கொண்டு துண்டறிக்கைகளும், துண்டுப் பத்திரிகைகளும் "வெளியிடவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளதையும் வெளியிட்டாராம்:

"கிளிநொச்சிப் பொலிஸ் அதிகாரி மாற்றத்தில் பொய்யை எழுதி மக்களை நம்பச் செய்தேன்; சென்னையில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில்—பூம்புகாரில்— திரு. இரத்தினம் பேசிய பேச்சை வைத்துக் "கொடு கொடு" என்று கொடுத்தேன். தமிழ் மறைக் கழகத்தில் தேர்வுகளுக்குக் கட்டும் பணத்தை இரண்டு மூன்று பங்காகப் பெருப்பித்துக் காட்டி காசுக்காகப் குழி பறித்தேன். இறந்துபோன தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பழைய கடித இதழை வைத்துக் கொண்டு நாவலர் விழாச் சபைக்கும் அவருக்கும கல்லெறிந்தேன்! இல்லாத மூன்று சங்கங்களின் பெயரைக் கொண்ட ஓர் துண்டறிக்கையை வெளியிட்டுச் சேறு பூசினேன். இவை எல்லாம் இடையிடையே தான் நடந்தவை. இனித்தான் எனது கைவரிசையைக் காட்டுவேன். பாருங்கள்.

பாராளுமன்றத்தில் அவர் வெட்டிப் பிடுங்குகிருர்" என்று மக்கள்கருதுகிருர்கள்; பாராளுமன்றத்தில் அவருடைய குரல்தான் கேட்கிறது; அவரைப் போல எல்லாத்தமிழ்ப் பா. உ.க்களும் பாராளுமன்றத்தில் ஒழுங்காகக் குரல் எழுப்பினுல் என்ன? என்று மக்கள் கூறுகின்ருர்கள். "இதுக்கும் வைக்கிறேன் திரி" என்ருராம். உடனே அவருக்கு "அழுக்குவேலை"செய்கின்ற அடியாட்களுடன் மந்திராலோசனை நடைபெற்றதாம். திரு. இரத்தினத்தைப் பாராளுமன்றத்தில் "விழுத்த" வேண்டும். எப்படி என்ருலும் எங்கிருந்தென்ருலும் ஒரு துண்டுச் செய்தி கொண்டு வாருங்கள் தான் "கைகால்" வைத்து வெளியிடுகின்றேன் என்ருராம். சனியன் நளமகாராசாவைப் பிடிக்கப்பார்த்த கதை புதுப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றச் சிற்றுண்டிக் கூடத்தில் விரும்பினவுடன் தனக்குப் பேச நேரம் கொடுக்கப்படவில்லை என்றதமாசாக நண்பர்களுடன் ஒருவர் உரையாடியதை "ஓசியில்" தேனீர் விருந்தருத்தியவர் ஒருவர் கேட்டுக்கொண்டிருந்தார்: அவர் கேட்டதை வேருெருவருக்கு ஒப்புவித்தார். காரியம் கைகூடிவிட்டதென்று கருதி திரு. இரத்தினத்தைத் தொலைக்க பொய்யும் புரட்டும் கலந்த செய்தி ஒன்று 11. 9. 69 தினபதி இதழில் 6 கலம் தலைப்புக் கொடுத்து முற்பக்கத்தில் அன்றைய முகிய செய்தியாக வெளிவந்தது.

இந்தச் செய்தி பற்றி திரு. இரத்தினம் உரிமைப் பிரச்சினையைப் பாராளுமன் [illegible] செய்தி தான் [illegible] காகச் சபைக்கு வருவதில்லையென்று மக்களுக்கிடையில் தவருன ஒரு கருத்தைப் பரப்ப முயலுகின்றது. எனவே இச்செய்தி பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும், எனது கட்சியின் கொரடாப் பதவியையும் பங்கப்படுத்தும் நோக்கமாக வேண்டுமென்றே வெளியிட்டிருக்கின்றதென்பது நன்கு புலனுகிறது— என்று திரு. இரத்தினம் சுட்டிக்காட்டிய பின், கிளிநொச்சி அங்கத்தவர் ஒழுங்காகச் சபைக்கு வந்துள்ளார். நான் தினமும் அவரைப்பார்த்திருக்கிறேன். அங்கத்தவர் கூற்றிலிருந்து அதைப் பொறுத்தவரையில் "ஒழுங்குமீறல் பிரச்சினை இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன்" என்று சபாநயகர் கூறியதும் ஏறக்குறைய சிங்கள, ஆங்கில, தமிழ் ஏடுகள் எல்லாவற்றிலும் வெளிவந்துள்ளது.

இதன் பின்னர் தினபதி ஆசிரியர் மேற்கண்ட பொய்ச் செய்தியை வெளியிட்டதற்காக சபாநயகரிடமும், சபையிடமும் 16. 9. 69 தினபதி மூலம் பகிரங்க மன்னிப்பு கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

—"ஊசிமுறி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாச் சிறப்பிதழ்

**சைவம் வளர்த்த நாவலருக்கு ஈழத் தமிழினம் இவ்வாரம் நூல் தந்த பெரும்புலவர் அடிகளுக்கு அவர் பிறந்த சிலைநிறுவி விழா எடுக் திகதி விபுலானந்தர் சிலை விமரிசையாக பவனியில் பல்வேறு ஊர்களினூடா ட்டு அக்டோபர் முதலாந் திருவிழா நடைபெறுகிறது. ஞ் சிற்பியான புல்லுமலை ளார்.**

பிக எளிதில் புலப்படுவது ர் விந்தையல்ல. பரம் பொருளின் நிஜத்துவத்திற்கு பெருமளவு காரண காரிய விளக்கமும் கூற வல்லமை ழும். எத்துணைப் பல்தரத் தராதரங்களைப் பெற்றும் தமிழ்மொழி அன்னரது ஜீவ மூச்சு. சுவாமிகளின் காலத் தில் ஆங்கிலேயர்கிள்ளிவீசும் அற்பசொற்ப உத்தியோகங் களும், அவற்றின் துணை கொண்டு நம்மவர் ஏனைய தமிழர்களிலும் பார்க்க போலி உயர்வு பெற்று படிப் படியாக உருக்குலைந்த கால மது.

தமிழில் கற்பது, கற்பிப் பது, அதனைக் காத்துப்பேண முன்வருவது, ஏன் தமிழில்



பேசுவதே தாழ்வு நிலை பினைத் தழுவக் கங்கணங் கட்டியது போன்ற கால வேகங்காட்டிய தருணத்தில் இத்தனை ஆங்கில அறிவும், விஞ்ஞான அறிவுத்தராதர மும வாய்ந்த சுவாமிகள் தன்மானம் பேணும், தமி ழனுக எதற்கும் தமிழ்மூச்சே முழுமூச்சாக வாழ்ந்து காட் டினார். 1917ல் இலண்டன் சர்வகலாசாலையின் பி. எஸ். சி. பரீட்சையில் சித்தியெய் திய வேளையில் வெள்ளைக் காரருடைய ஆட்சிபீடத்தி தில் மிக உயர்ந்த, பவுசு நிறைந்த பதவியை வகுத்து ஏனைய தமிழர்களிலும் பார்க்க இககுக போகத் தினை அனுபவித்திருக்கலாம். ஆனால் இத்தனை தராதர மிருந்தும் ஆக இரண்டு வரு டங்கள் மட்டும் (1920 1922) மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தலைமை ஆசிரி யராகக் கடமை புரிந்து அத் துடன் நிறுத்திக்கொண்டு "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்ற துறவு வாழ்க் கையிற் புகுந்துகொண்டார்.

ஏகாந்தத்தை நாடிய சுவாமிகள் சென்னையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடால யத்தை அணுகினார். தனது உடல், பொருள், ஆவி, அனைத்தையும் தமிழின் எழுச் சிக்கும், தமிழரின் தன்மான வாழ்விற்கும் அர்ப்பணிக்க வல்லவர் எனக் கண்டு கொண்டதால் பலர் அவர் மீது அபிமானங் கொண்ட வர். சுவாமிகளின் நன்னெ றியும், சீரறிவும் நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்டு ஈடேற பலர் சென்னையில் திரண்டனர். விஞ்ஞான அறி வுத் திரட்டுகளை எழிய தமி ழில் வெளியிட்டு மக்கள் மத் தியில் பரவலான அறிவுப் பசியை ஏற்படுத்தும் நோக்க மாக சென்னையில் தோற்று விக்கப்பட்ட தமிழர் சங்கத் திற்கு தமது அறிவையும் அனுபவத்தையும் அடிக்கடி அள்ளி வழங்கிப் பெருமகத் தான பணி புரிந்தார் சுவா மிகள் அவர்கள். இவரது உதவியால் தொகுக்கப்பட்ட விஞ்ஞான கலைச் சொற்கள் பறபல தமிழ்க் கவிஞரும், யோகச் செம்மலுமான சுத் தானந்த பாரதியார் சுவாமி களின் கவிதைப் புலமை யைப் பன்முறை பயன் படுத் தியுள்ளார் என்பது ஈழத் தமிழருக்குப் பெரும் தவப் புகழாகும்.

சிலப்பதிகாரத்தை யோகி யவர்கள் அரங்கேற்று முக மாகயாத்த காதையில் சுவா மிகளின் உயர்தர ஆலோச னைகளே பெருமளவிற்கு முன் னணியில் நின்றன. சுவாமிக ளின் தமிழ் ஆராய்வுத் திறன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தா ரின் "செந்தமிழ்" என்னும் உயர்தர வெளியீட்டொன் றின் மூலமே தமிழுலகிற்கு சொந்தமாகியது. 1924ம் ஆண்டு வரை பண்டிதர் மயில்வாகனனார் என்று விளங்கியவர் அவ்வாண்டு தொட்டு துறவுத் திருநாம மாகிய சுவாமி விபுலானந் தர் ஆனார்.

1925ல் சுவாமிகள் தாய கந் திரும்பித் தமிழ்த் தொண்டின் ஆரம்பபடியாக பற்பல இடங்களில் தமிழ் மொழி தலைக்கவல்ல பல பிரசாரவேலைகளில் ஈடுபட் டார். பல அபிமானிகளும் தயாளர்களும் இவரில் தாய் மொழிப் புதுமையைக் கண் டனர். சுவாமிகளின் அய ராத உழைப்பினலும், அவர் மீது பலர்கொண்ட பக்தியி னலும் மட்டக்களப்பில் சாரதா, சிவானந்தா வித்தி யாலயங்களும், திருகோண மலை ஆங்கில வித்தியாசாலை

(9-ம் பக்கம் பார்க்க)

# முத்தமிழ் வளர்த்த மூதறிஞர்

விபுலானந்த அடிகளார் எனும்போது தமிழ் கூறும் நல்லுலகம் முதற்கண் நினைவு கூரும் செல்வம் அவர் படைத்தருளிய 'யாழ் நூலாகும். இராவணன் காலமுதல் இசையின பிறப்பிடமாகக் கருதப் பட்டுவரும் ஈழ மணித் திருநாட்டில் அவத ரித்த விபுலானந்தர் இசைத் தமிழுக்காற்றிய தொண்டு அளவிடற்கரியது. யாழ் நூல் இசைக் கலையின் வரலாற்றை விளக்கும் அரும் பெரும ஆராய்ச்சி நூலாகும். தமி ழர் மூவகை இசைக் கருவிக ளைக் கையாண்டனர். தோற் கருவி, துளைக் கருவி, நரம் புக் கருவி என்பன அவை, காய்ந்த தோலில் உலர்ந்த குச்சகள் உராய்ஞ்சியதலை தோனறிய ஒலியிலிருநது பிற ந்தது முடிவு, கையிலேயிருந்த வில்லிலிருந்து பறந்தது கணை: ஆனல் கணையின் செய லிலிருந்து பிறந்தது ஓசை. நாணிலிருந்து பிறந்த இசை யாழாக உருவெடுத்தது. நாணல் கொடியின் தீஞ்சு வையால் வண்டுகள் அவற் றின் தண்டினைத் துளைத்துக கொண்டு உட்புகுந்திருக்க அதன் துளையூடாகச் சென்ற தென்றல நாதத்தைக் கிளப பியது. இதிலிருந்து கண்ட னர் குழலினை. பல்வகை இசைக் கருவிகளையும் கண்டு இசையில் மேம்பட்டிருந்த தமிழர்கள் ஒரு பெருங்குறை யாக இசைக்கு இலக்கணம் வகுக்க மறந்து விட்டார் கள். இசைக் கருவிகளுக்குச் சிறப்பளித்து அக்கருவிகளின் வாயிலாக வெளிப்படும் நாத த்துக்கு இலக்கணம் அமை த்த பெருமை இசைவாணர் விபுலானந்த அடிகளா ரையே சாரும். இவர் தன க்கு வாய்த்த விஞ்ஞான அறிவையும் பயன்படுத்தி பதினன்கு வருடம் ஆராய் ச்சி செய்து கண்ட விளைவே 1947ம் ஆண்டு ஜூன் மாதம் 20ம் திகதி தமிழுலகுக்களி த்த யாழ் நூலாகும். இது கரந்தைத் தமிழ்ச் சங்கத் தில் அரங்கேற்றப்பட்டது. இசையின தொன்மையை யும் சங்ககால முதல் இசை யின் தொடர்பான வரலாற் றையும் கூறுவதுடன் பல் வகை யாழ்களும ஏழிசை வகுப்பும், நரம்புகளின் தன் மையும். நூற்றி மூன்று பண் களின் வகைகளும் மிக நுட் பமாக விளக்கப்பட்டுள்ளன.

மதுரைத் தமிழ்ச் சங்க விழாவொன்றில் அடிகளார் நாடகத் தமிழ் பற்றியாற் றிய, சொற்பொழி வொன்றே நாடகத் தமிழு க்கு அன்னார் ஆற்றிய அளப் பரிய தொண்டினுக்குக் கார ணமாக அமைநதது. மேற் படி சங்கச் செயலாளரான டி. சி. சீனிவாச ஐயங்கார் அடிகளாரிடத்தில சொற் பொழிவினை நூல் வடிவத் தில் ஆக்கித் தரும்படி கோரி யதன் விளைவால் அடிகள் மேலும் ஆராச்சியில் ஈடு பட்டு நாடக இயல்புகளை விளக்கும் 'மதங்க சூளா மணியை ஆக்கியளித்தார். இது [illegible] பியார் என்பதாகும்.) நாட கங்களையும், வடமொழியில் தனஞ்செயனாது தசரூபத் தையும், இளங்கோவின் நாடக நுணுக்கங்களையும் ஒப்பி நோக்கியாராய்ந்து நாடக இயல்பினையும் இலக்க ணத்தையும் கூறுகிறது. இந் நூல் மதுரைத் தமிழ்ச் சங்க த்திலேயே அரங்கேற்றப்பட் டது.

மானிப்பாய் இந்துக் கல் லூரியில் பணியாற்றிய போது ஈழநாட்டின் முதற் றமிழ்ப் பண்டிதாரன அடிக ளார் யாழ்ப்பாண அறிஞர்க ளின் கூட்டுடன் யாழ்ப் பாண ஆரியதிராவிட பாஷா பிவிருத்திச் சங்கத்தினை நிறு வினார். தமிழ் வளர்ச்சியே இதன் குறிக்கோளாக இருந் தது. இதன் மூலம பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என முத்தரப் பரீட்சைகளை அடிகள் ஆரம் பித்தார். அண்ணமலைப பல் கலைக் கழக தமிழ்ப் பேராசி ரியராக இருந்த காலத்தில் அங்கே 'பாரதி கழகம்' என் னுரு சங்கத்தினை நிறுவி அதன் மூலம் பாரதியாரின் பாடல்களை உலகிற் கெடுத தோதினார்கள். இன்னும் சென்னைப் பல்கலைக் கழக தமிழாராய்ச்சிக் குழுவில் உறுப்பினராயிருந்து பணி யாற்றியதுடன் சென்னை மாகாணச் சொல்லாக்கக் குழுவின் பொதுத் தலைவரா கவும் இருந்து தமிழ்ச்சேவை செய்தார். பௌதிகவியல் சம்பந்தமான மேற்கத்தை யச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களைக் கொண்ட அடிகளாரது கலைச் சொல்லகராதி சென் னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது.

அடிகளார் செய்த கல்விச் சேவையும் எடுத்தியம்பற் பாலதாகும். ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலும் கல்விக் கூடங்கள பலவற்றைப் புதி தாகக் கட்டவும் விருத்தி செய்யவும் காரணமாக இருந்தார்கள். தன் வாழ் நாளில் பெரும் பகுதியில் படிப்பிக்கும் தொழிலையே மேற் கொண்டிருந்தார். மட் டக்களப்பு அர்ச். மைக்கேல் கல்லூரி, இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பா ணம் அர்ச். சம்பத் கிரீஸியர் கல்லூரி, கல்முனை கத்தோ லிக்க மிஷன் பாடசாலை ஆகி யவற்றில் ஆசிரியராகப் பணி யாற்றியதுடன் மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருகோண மலை இந்துக் கல்லூரி என்ப வற்றின் அதிபர் பதவியினை யும் ஏற்றிருந்தார்.

மானிப்பாய் இந்துக் கல் லூரியின் அதிபராக இருந்த போது அரும் பெரும் முயற் யினல் ஒரு விஞ்ஞான ஆய்வு கூடத்தை அமைத்துக்கொடு த்தார் கிழக்கிலங்கை இராம கிருஷ்ண மடத்துப் பட சாலைகளின் பரிபாலகராக பணியாற்றிய போது இவர் பல பாடசாலைகளைப் புதி தாக உருவாக்கவும் முடிந் தது. பிறந்தகமான காரை தீவில் பெண்களுக்கென ஒரு பாடசாலை நிறுவி 'சாரதா வித்தியாலயம்' எனப் பெய ரிட்டார். மட்டக்களப்பில் கல்லடி எனும் பகுதியில் சிவானந்தா வித்தியாலயம் என்ற பெயரில் ஓர் ஆங்கிலக் கல்லூரியை நிறுவினார். அடிப்படைப் பண்பாடு சீர் குலையாமல் ஆங்கிலங் கற்று மேதையாக வரலாம் என்ற அடிகளாரின் சீரிய பாதை யில் இன்றும் இலங்கிக் கொணடிருக்கின்றது சிவா னந்தா வித்தியாலயம். திரு கோணமலையில் இருந்த சைவப்பாடசாலையை இந் துக் கல்லூரியாக மாற்றிய வரும் அடிகளாரே. அண்ணா மலைச் செட்டியாரது வேண்டுகோளின் பேரில் அண்ணாமலைப் பல்கலைக் கழ கத்துத் தமிழ்ப்பேராசிரியர் பதவியினை ஏற்றார். மேலும் இலங்கையில் இருந்த காலத் தில் இலங்கைப் பல்கலைக் கழ கத் தமிழ்த் துறைத் தலைவ ராகவும் பணியாற்றினார். இலங்கைக் கல்விப் பகுதியின் பாடநூற் பிரசுர சபை, பரீட்சைச் சபை, கல்வி யாராய்ச்சிச் சபை என்பன வற்றிலும் உறுப்பினராக இருந்தார். சங்கீத பாடத் துக்கும் சமய பாடத்துக்கும் அடிகளார் பாடத் திட்டங் களை வகுத்துக் கொடுத்தார்.

தன் இறுதிக் காலத்தில் யாழ் நூலையீந்த வித்தகா அந்நூல் அரங்கேறி ஒரு திங் களாவது உயிர் வாழக் கொடுத்து வைக்கவில்லை. 1947ம் வருடம் ஜூலை மாதம் 19ம் திகதி அன்னாரின் உயிர் இவ்வுலகை விட்டகன் றது. மறைந்த தமிழ் மகனை புலவர் மணியின் நினைவுப் பாவுடன் நினைவு கூருவது ஏற்புடைத் தாகும்.

"முத்தமிழின் வடிவமெனத்
தோன்றி மேற்கு
மொழிக் கடலும்
வடகடலும் முறையினடித்
தத்துவ நன்னெறியுணர்ந்து
சாந்தி கண்ட
தவமுனியை யிசைத்
தமிழின் தந்தையென்ன
வித்தக யாழ் நூலருளும்
விபுலானந்த
வியன் மணியை யீடிமணி
விளக்கை நாளும்
சித்தமதில் மகிழ்ந்தேற்றிப்
பத்தி செய்து
புத்தி தெளிந்துண்மை வழிச்
செல்வோம் யாமே"

புலவர் மணி
ஏ. பெரியதம்பிப்பிள்ளை.

**யூ. எஸ். அலியார் பீ. ஏ.**

## வன்னியர் நினைவு

வன்னியசிங்கத்தின் நினைவு குறித்து மாவை கொல்லங் கலட்டி சனசமூக நிலையத்தி னர் அவர் பிறந்த ஊரில் ஓர் விசேச பூசையும் திரைப் படக்காட்சியும் காண்பித்த னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# அக்கா இருளில் இருக்கிருள்!

விடிந்தால் எனக்குத் திருமணம்.

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருக்கிறேன்.

வாடைக்காற்று திறந்து கிடந்த ஜன்னலூடாகவந்து இன்ப நினைவுகளுக்கு ஆதார சுருதி சேர்த்து இனம் புரியாத ஒரு மயக்க உணர்வை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

திருமண ஏற்பாடுகளில் அலுத்துப் போய் மூலைக்கு ஒவ்வொருவராக முடங்கிக் கிடப்பவர்களின் குறட்டை ஒலிகள் பல்வேறு கீர்த்தனைகளாக வந்து அருமையான நித்திரையைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன.

பக்கத்து அறையிலுள்ள விளக்கு இன்னும் அணைக்கப் படவில்லை. என்னுடைய இரண்டாவது அக்கா ரூபியும் மூன்றாவது அக்கா ராணியும் அந்த அறைக்குள்ளே படுப்பது வழக்கம்.

"கல்யாணத்துக்கு எந்தப் புடவையைக் கட்டி எந்த கொண்டை போட்டால் எடுப்பாக இருக்கும்...?..." அர்த்தராத்திரியில் இந்தச் செமிபாட்டுக் கதைகளைத் தான் அவர்கள் ஜீரணிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் காதைப் பொத்துகிறேன் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. இரண்டு முறை அவர்கள் அறிந்து கொள்வதற்காக உரத்துச் செருமிக் கனைத்து... சிடுசிடுத்து ஒருவாறு ஆத்திரம் தணிகிறது.

அடுப்படியில் வெண்கலப் பாத்திரங்களின் சப்தம் எனக்கு இப்போது தெளிவாகக் கேட்கிறது.

அம்மா கூட படுத்துவிட்டாள். யாராக இருக்க முடியும்? படுக்கையிலிருந்து எழுந்து வந்து எட்டிப்பார்க்கிறேன்.

என்னுடைய உணர்ச்சிகளெல்லாம் ஒரு சணம் உறங்கிவிட நெஞ்சுக் குழிக்குள் உருண்டை ஒன்று ஓடித்திரிவது போன்ற அவஸ்தையை அனுபவிக்கிறேன்.

வெண்கலப்பாத்திரங்களை உரஞ்சி உரஞ்சி அலுத்துப் போய் என் மூத்தக்கா கமலம்—அக்கா என்னைப்பார்த்ததும் திரு திரு என்று விழிக்கிறாள். அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

ரூபியும் ராணியும் செமிபாட்டுக் கதை கதைக்க, இந்த அர்த்த ஜாமத்திலும் கொட்டு கொட்டென்று விழித்து லொக்கு லொக்கென்று இருமிக் கொண்டிருக்கும் அவளை நீண்ட நேரம் என்னால் பார்க்க முடியாமல் இருக்கிறது.

என் கண்களை மெல்ல மூடுகிறேன்.

மூடிய என் கண்மலரிலிருந்து முத்துக்கள் உதிருகின்றன. அவை கமலம் அக்காவுக்குநான் சிந்தும் அன்பின் முத்துக்கள்.

அவளுடைய முகபாவங்களை நான் உணர்ந்து கொள்கிறேன்.

"எல்லாத்தையும் வைச்சிட்டுப் போய்ப்படுங்கோ அக்கா..."

'உன் கல்யாணத்துக்கு நான் கஷ்டப்படவேணுமடா...'

அவள் தான்—என் கமலம் அக்காதான் — எனக்காகப் பேசுகிறாள்.

"நாளைக்கு நீங்கள்தானே முன்னுக்கு நிண்டு ஓடி ஆடி எல்லா அலுவல்களையும் கவனிக்க வேணும்..." சொல்லி விட்டுத்தான் நாக்கைக் கடித்துக் கொள்கிறேன்.

நான் சொல்லக்கூடாததும் அவள் கேட்கக் கூடாததும்.

ஒரு நிமிடநேரத்தில் என் மன உத்வேகத்திலை நடந்து விட்டது அது ஆழம் காண முடியாத ஒரு சோகப் பெருமூச்சு மெல்ல மெல்ல அவள் இதயத்தின் அடியிலிருந்து கிழம்பிற்று.

இறந்த காலங்களின் சுவடுகளை அவளுக்கு நான் ஞாபகப் படுத்திவிட்டேனா?

அணைந்து கொண்டிருந்த நெருப்பை தவறுதலாக நான் ஊதிவிட்டேன். ஒரு பொறி அவளைச் சுட்டுவிட அந்த உஷ்ணம் தாங்காமல் அவள்...?

என் கமலம் அக்கா விசும்புகிறாள் விக்குகிறாள்.

நாளைக்கு அவளை என் கல்யாணத்துக்கு முன்னுக்கு நிற்கச் சொல்கிறேனே...! அவள் எப்படி நிற்பாள்? அவளை அப்படி நிற்கத்தக்கநிலையிலா ஆண்டவன் வைத்திருக்கிறான்? அவள் எப்படி நிற்க முயன்றாலும் இந்த சமூகம் சம்மதிக்குமா...?

இதோ கைவிரல் தேயத் தேய என் கல்யாணத்துக்காக இந்தப் பாத்திரங்களைப் போட்டு உரஞ்சி தன்னை வருத்தி... குமுறும் இதயத்துடன் ஒரு மூலையில் ஒதுங்கியிருந்து என் கல்யாணத்தைப் பார்க்க வேண்டியவள் தானே... ஒரு ஆராத்தி எடுக்கும்... வாசலிலே நின்று வந்தவர்களை வரவேற்கும் இவளுடைய உரிமைகளெல்லாம் பறிக்கப்பட்டு விட்டதே...! எல்லோரும் பட்டுப்புடவை சலசலக்க கூந்தல்களில் மலர்களின் நறுமணம் கமகமக்க ஓடித்திரியும் பொழுது வாடிப் போன மலர்போல வதங்கிப் போய் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்க வேண்டியவள் தானே...

காஞ்சிபுரமாம்... மணிப்புரியாம்... டெக்கரோனும்...... ரூபியும் ராணியும் தங்களுக்குக் கல்யாணத்துக்கென்று எடுத்த பட்டுச் சேலைகள். கமலம் அக்காளுக்கு முன்னாலே அந்தச் சேலைகளை அவர்கள் காட்டிப் பெருமையடித்த பொழுது வெறும் நூற்புடவையை வைத்து நெருந்து கொண்டிருந்ததைத் தான் கொட்டிவிட்டேன்... அவள் அழுதாள்.

'வெள்ளை உடை உடுக்க வேண்டும்...... பூ வைக்கக் கூடாது...பொட்டு வைக்கக் கூடாது...!

சே... சமூகம் அவளுக்கு விதித்த கொடிய தண்டனை.

அவள் விதவை தான். வாழ்வுகருகிவிட்டது தான்... ஆசைகள் கருகிவிடநியாயம் இருக்குமா...?

எப்போதோ ஒரு நாள் அழகான டிசைனில் ஒரு பட்டுப் புடவையைக் கண்டு ஆசைப்பட்டுவிட்டாள் என்பதற்காக பழமையிலே ஊறித்திளைத்த ஒரு கிழவி அவளை நையாண்டி செய்ததை நான் மறக்கவில்லை.

தவறுதலாக... ஒரு வெள்ளிக்கிழமை... பூ வைத்து பொட்டும் வைத்துவிட்டாள் என்பதற்காக என் அம்மாவே ஒருநாள் அவளை ஏசியிருக்கிறாள்;

> **வெள்ளை உடை உடுக்கவேண்டும் பூ வைக்கக் கூடாது... பொட்டு வைக்கக் கூடாது...! சே... சமூகம் அவளுக்கு விதித்த கொடிய தண்டனை...! அவள் விதவை தான். வாழ்வு கருகிவிட்டது தான்; ஆனல் ஆசைகள் கருகிவிட நியாயம் இருக்குமா...?**

இவ்வளவு வேதனைகளையும் அடைந்தவள்...... இப்போது சுமக்க முடியாமல் அழுகிறாள். அவள் அறைக்குள்ளே போய் அழுகிறாள். கதவைச் சாத்திவிட்டாள் .... ஜன்னல்களை மூடிவிட்டாள். நாலு பக்கச் சுவர் மட்டும் அவள் கவலையை எதிரொலிக்கவில்லை... என்னுடைய இதயமும் அவள் கவலையைத்தான் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

என்னுடைய அறையை நோக்கி நடக்கிறேன். எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்தபோது என் அறை மட்டுமல்ல என் இதயமே இருண்டுவிட்டது போன்ற ஒரு உணர்வுதான் எனக்கு ஏற்படுகிறது.

பக்கத்து அறையில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. ரூபியும் ராணியும் இன்னும் தூங்கவில்லை. அவர்கள் இன்னமும் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த சிரிப்பொலிகளினூடாக கமலம் அக்காவின் விசும்பல் ஒலியும் இடைக்கிடையே கேட்டுக் கொண்டிருக்கிறது.

ரூபி தான்தான் நாளை என்னுடைய கல்யாணத்துக்கு தோழி என்று ராணியிடம் பெருமையடித்துக் கொண்டிருக்கிறாள். மணவறையிலே எனக்குத் தோழியாக அவள் இருக்கப் போகிறாளாம்.

எனக்கு இதில் கொஞ்சம் கூட இஷ்டமில்லை.

என்ன செய்வது... கமலம் அக்கா விதவை...!

கமலம் அக்கா தானாகவே ஒதுங்கிவிட்டாள்.

இல்லை சமூகத்தின் சட்ட திட்டங்களுக்கு அவள் சரணகதி அடைந்து இரையாகிக் கொண்டிருக்கிறாள்.

என்னுடைய கல்யாணம் அவள் கண்ணுக்கு முன்னே தான் நடக்கப்போகிறது.

இப்போது நான் கொஞ்சம் புரண்டு படுக்கிறேன். என் நினைவும் எப்போதோ நடந்த ஒரு நிகழ்ச்சிக்குப் புரண்டு கொண்டிருக்கிறது.

அப்போது கமலம் அக்காளுக்கு கல்யாணம் நடந்த வேளை... வெட்கத்திலே தலை குனிந்தபடி மணவறையிலே அவள் உட்கார்ந்திருந்தாள். நான் தான் மணவறைத் தோழன். அவள் புருஷன் பக்கத்திலே உட்கார்ந்திருக்க நான் கமலம் அக்காவின் சேலைத்தலைப்பையும் அத்தானின் வேஷ்டித் தலைப்பையும் பின்புறம் நின்று முடிந்து விட்டேன்... வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்ன... பொய்க்கோபத்தின் சாயலிலே முகம் சிவக்க பூரித்த முகத்துடன் அவள் அன்று சொன்ன சொற்களெல்லாம் இன்றும் இன் இதயத்திலே பசுமையாக பத்திரமாக அழியாமல் இருக்கிறது 'இரு...இரு... உனக்கும் கல்யாணம் நடக்கும்... உனக்குத் தோழியாக நான் வருவேன்... அப்போது உன்னை என்ன செய்கிறேன் வேடிக்கையாகச்சொன்னாள்.

அது வேடிக்கைப் பேச்சல்ல ஆசையின் காலூலம்... ஆமாம்... அது ஆசைதான்...

நானும் வளர... அவளுடைய நெஞ்சிலே இந்த ஆசையும் வளர்ந்திருக்கிறது...

என்னுடைய கல்யாணத்துக்கு முன்னுக்கு நின்று எல்லாம்தானே கவனிக்க வேண்டும் என்று எவ்வளவு ஆசைப்பட்டாள்......பாவம்......அது முடியாமல் போய் விட்டது.

ஆசை ஏக்கமாக வளர்ந்து, இன்று அவளை அந்த ஏக்கம் பிழிந்தெடுக்கிறது. என் நெஞ்சைத் திறந்து சொல்லுகிறேன் அவளுடைய ஆசகமான பேச்சிலிருந்து தான் புரிந்து கொண்டேன்.

மு. திருநாவுக்கரசு

எத்தனையோ இரவுகள் இந்த ஏக்கம் அவளை வதைத்திருக்கிறது. அவளுடைய உரிமையை விட்டுக்கொடுக்க வேண்டுமென்ற அவள் எண்ணுகின்ற ஒவ்வொரு விநாடியும் அவளுக்கு துன்பம் தருகின்ற பொழுதுகள் தான்

தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுக்கப் போகிறேன் என்று எண்ணும் பொழுது தன்னுடைய உயிர் போவது போன்ற வேதனையை அவள் அநுபவிக்கிறாள் என்பது எனக்குத் தெரியும் எனக்கு ஒரு நல்ல நிகழ்ச்சி நடக்கப் போகிறது அவள் அதிலே முக்கிய பங்கு எடுக்கா விட்டால் பிறகு அவளுக்கும் எனக்கும் இருக்கும் அப்படை உறவின் அர்த்தம் என்ன...?

இப்போது ரூபியும் ராணியும் கமலம்அக்காவைக் கிண்டலாகக் கதைக்கிறார்கள். அவள் விதவை என்று பேசி பேசி...அவளுடைய ஆற்றாமையைக்குத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சமூகம் என் அக்காவின் வாழ்வை அழிக்கிறது என்று கூறுகிற நான் ஒரு முட்டாள் அதற்காகத் துடிக்கிற நான் ஒரு துணிவில்லாதவன்.

சமூகத்தின் ஆக்கிரமிப்புகளிலிருந்து அவளுடைய கைகளில் பூட்டப்பட்டிருக்கும் கைவிலங்கை உடைத்தெறிய வேண்டுமென்று துடிக்கிறேனே...!

என் வீட்டிலே... என் சொந்த வாழ்க்கையிலே... எங்கள்குடும்பத்திலே அவளை தூக்கிவிட முயற்சித்திருக்கிறேனா...?

அவள் விதவை என்று எல்லோராலும் குத்திப் பேசப்பட்டு...அந்த வேதனை என்ற பெரு வெள்ளத்திலே அவள் அடித்துச் செல்லப்பட்ட போதெல்லாம் ... நான் என்ன செய்தேன்...?

சமூகத்துக்காக நான் பயப்படுகிறேனா?

என்னையே நான் கேட்கும் பொழுது எனக்கே வெட்கமாக இருக்கிறது.

என் குடும்பத்திலிருந்து அவளுடைய விதவை என்ற பட்டத்தை நீக்க வேண்டுமென்ற ஒரு வேகத்துக்கு நான் அடிமைப் படுகிறேன்.

வாழ்ந்த காலங்களின் சுவடுகள் தெரியாமல் அவள் வாழப் போகின்ற காலங்களிலே விதவை என்ற பட்டத்தின் சுமை இல்லாமல் சந்தோஷமாக வாழ வேண்டும் என்றொரு ஆசை என்னைப் பிடித்து உலுக்கு உலுக்கென்று உலுக்குகிறது.

எழுந்துவிட்டேன்;

அதே வேகத்தில் அலுமாரியைத் திறக்கிறேன்.

சுமார் பத்துப் பன்னிரண்டு கண்ணைப் பறிக்கும் சேலைகள் மின்னிக் கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் என்னுடைய எதிர்கால மனைவிக்காக நான் வாங்கிவைத்திருக்கும் சேலைகள்.

அவற்றில் சிவப்பும் நீலமும் கலந்த சேலை என் கண்களை உறுத்துகிறது.

அந்தச் சேலை கமலம் அக்காவுக்கு எவ்வளவு அழகாக இருக்கும்......! பொன் நிற மேனியில் அந்தப் பட்டுத் துணி புரளுகின்ற போதெல்லாம் அவளுடைய அழகை வர்ணிக்கவே முடியாதல்லவா...... அவளுடைய அறையை நோக்கி நடக்கிறேன்... இல்லை என்னுடைய உணர்ச்சிகள் அங்கே பறக்கின்றன.

இப்போது அவள் அழவில்லை...... விசும்பவில்லை...... விக்கவில்லை... பெலவீன பெருமூச்சுகள் கூட இருந்த இடம் தெரியாமல் போய்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கா இருளில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்ட அந்த அறையின் கதவு கீள நான் தட்டுகிறேன்.

கதவை அவள் திறக்கிருள். அவளுடைய பாதிமுகம் கதவுகளின் நீவினூடாக மங்கிய ஒளியிலும் தெளிவாகத் தெரிகிறது.

என்னுடைய கையிலிருந்த அந்த கஷ்மீர் சேலேயைத் தான் அவள். பார்த்துக் கொண்டிருக்கிருள். அந்தச் சேலேயைப் பார்த்ததும் என்ணற்ற சிந்தனே அலேகளின் செறிவு அவளேத் தழுவலாம்.

எதுவும் பேசாமல் வெறித்துப் பார்க்கும் அவளின் முக பாவ உணர்வுகளே என் மன உணர்வால் விஞடிக்கு விஞடி அளந்து கொண்டிருக்கிறேன்.

'இதை என் கல்யாணத்துக்கு உடுத்திக் கொண்டு நாளே நீ தோழியாக வர வேண்டும்...'

அவளிடமிருந்து என்ன பதில் கிடைக்கும் என்ற ஒரு சுவிப்பில் நான் நின்று கொண்டிருக்கிறேன். சமூகத்துடன் நான் நடத்தப் போகிற ஒரு பெரிய போராட்டத்தின் ஆரம்பப் படி என்றே இதை நான் கருது கிறேன்.

அவள் என்னுடைய இந்த புரட்சிக்கு தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் கொடுப்பாளா என்பது முதல் பிரச்சினே.

நான் அக்காவின் முகத்தையே பார்க்கிறேன்: அவள் என்னேயும் கையிலுள்ள சேலேயையும் பார்க்கிருள்.

"அக்கா. இந்தா பிடி. இதை உடுத்திக்கொண்டு நீ என் கல்யாணத் தோழியாக வரவேண்டும்"

அவள் தன் கண்களால் என் வார்த்தைகளேக் சுட்டு விடுபவளேப்போலப் பார்க்கிருள்.

'உனக்கென்ன விசரே. உந்தச் சீலேயைக் கொண்டு போய் குப்பையில் போடடா.'

அக்காவின் வார்த்தைகள் இப்படி என்னேத் தாக்குகிறது. கதவு முகத்திலடிப்பதைப்போலப் 'படீர்' எனச் சாத்திக் கொள்கிறது.

நான் அசைவற்று நிற்கிறேன்.

அக்கா!—அவள் சமூகத்துக்குப் பயப்படுகிள். சமூகத்தின் விளைவுகளுக்குப் பயப்படுகிருள். தொன்று தொட்டே வழங்கிவரும் கட்டுப்பாடில் அகற்றமுடியாதபடி அவள் உரம் பெற்றுவிட்டாள்.

நான் எனது அறைக்கு நகர்கிறேன்.

காகங்கள் கரைகின்றன. எங்கோ ஒரு சேவல் புத்துணர்வு பெற்று செட்டைகளேப் படபடத்துக்கொண்டு 'கொக்கரக்கோ' என்கிறது.

பொழுது விடிகிறது.

அக்காவுக்கு இன்னமும் விடியவில்லே. அவளேப் பொறுத்த மட்டில் அவளுக்கு விடியாது.

அக்கா இருளிலே வாழ பழக்கப்பட்டுவிட்டாள். ஒளியைக் காண அவளின் கண்கள் கூசுகின்றன.

நித்திரையில்லாததால் கண்கள் எரிகின்றன. கட்டிலில் அமர்கிறேன்.

அடுத்த அறையில் இப்போது ஒரே நிசப்தம்.

பெரியக்காவின் அறையில்:—

விக்கல், பொருமல், பெருமூச்சு.

இவ்வளவு காலமும் என் பெரியக்காவின் கண்ணீர்த் துளிகளேக் கண்டு நொந்து, நொந்து, அவளின் விடிவுக்காக பிராயச்சித்தம் தேட விழைந்த என்னுல் இப்போது அவளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடமுடியாமலிருக்கின்றதே.

(யாவும் கற்பனே)

## கர்ப்பக் கிரு...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

குவாக இடம் பெற்று விட்டாள் கீதாஞ்சலி.

முன்பு ஒருமுறை புனிதத்தின் அன்பு வெள்ளத்தில் மூழ்கித் திளேத்தவன் பிரகாஷ். மனதுடனேயே நின்று விட்ட பாசம் வாழ்க்கை வரை, கட்டில் வரை, துணே வரவில்லே. ஆனுல் கீதாஞ்சலி அவனே தினம் தினம் தன் அருகில் வைத்தே, ஆட்கொண்டு விட்டாள்.

அன்று பாடநேரம் போக மீதிநேரம் கதையிலேயே கழிந்து கொண்டிருந்தது. சுவர்க்கடிகாரம் எட்டு மணி அடித்தபோது தான் விழிப்புற்ருன் பிரகாஷ்.

'ஓ...மணி எட்டாகிவிட்டது; இன்னமும் உங்கள் அக்கா வரவில்லேயே' என்ருன்.

'அக்கா சினிமாவுக்கு போய் விட்டாள். நான் உங்கள் வரவுக்காகவே காத்திருந்தேன்.'

'ம்...அப்படியா? கீதா என் வாழ்வில் இப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என நான் நினேக்கவில்லே"

'நான் அப்படியில்லே.'

"என்ன?"

'உண்மைதான் சார்'

'கீதா...பாடநேரம் போக எங்கள் மிகுதி வேளேயில் சார் என்று என்னே...நீ சார் என்று அழைக்கும் போது என்மனம துணுக்குற்றுப் போகின்றது' என்ருன்.

'பிரகாஷ்—பிரகாஷ், என்று அழைத்தவாறே அவன் மார்பில் சாய்ந்தாள் கீதாஞ்சலி,

'கீதா...'

'பிரகாஷ். உங்களே கோணேஸ்வரத்தில் முதல் நாள் சந்தித்த போதே என் மனம் உங்களே விரும்பிற்று... தான்...' அவள் கரங்கள் கழுத்தில் மாலேயாக விழுந்தன.

அடுத்த கணம் அவன் எதிர்பாராத ஒரு விருந்து அவனுக்குக் கிடைத்து விட்டது. அவன் மின்சாரத் தாக்குதலுக்குள்ளானவன் போல அவளேப் பார்த்தான்.

'முத்தமே காதலின் முத்திரை என்ருர் ஓர் ஆங்கிலக் கவிஞர்' என்ருள்.

'ஓ...மை...காட்' என்று அவன் கூறி முடிக்கும் பொழுது வாசலில் சப்பாத்தின் ஒலி கேட்டது. அவள் அணேப்பிலிருந்து விலகுவதற்குள் அங்கேவந்தவனேக்கண்டதும் பிரகாஷின் உடல், உள்ளம் இரண்டுமே ஆட்டம் கண்டு விட்டது. (வளரும்)

## தமிழ் காங்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் மிக முக்கியமான அடிப்படை உரிமையான போதனுமொழிப் பிரச்சினேயில் அரசாங்கம் குத்துக்கரணம் அடிப்பது பகிரங்கமாக தெரிந்தபின்னரும் தமிழ் காங்கிரசு அரசாங்க கட்சியிலேயேயிருந்து வருகிறது.

கொழும்பு பல்கலேக்கழக துணேவேந்தர் நியமனப் பிரச்சினேயில் தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் எவரும் மூச்சுக் கூடவிடவில்லேயென்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் பேசும் மக்களின் நீண்டநாள்கோரிக்கையான பல்கலேக்கழகக் கோரிக்கையையும் கல்வியமைச்சர் காலில் போட்டு மிதித்து விட்டு 'ரோயல்கமிஷன்' நிறுவப்போவதாக கண்துடைப்பு அறிக்கை விடுத்துள்ளார். இதன் பின்னும், ரோயல்கமிஷன் நியமிப்பது வடக்கே ஒருபல்கலேக்கழகம் நிறுவுவதற்கு தடையாக இராது என்று திரு. இரியகொல்லே தமக்கு வாக்களித்திருப்பதாக திரு. பொன்னம்பலம் அறிக்கை விட்டிருப்பது, மீதிக்காலமும் தொடர்ந்து அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருப்பதற்கான ஒரு சாட்டு என்று கருதப்படுகிறது.

## விபுலானந்த...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யும் தாபிக்கப்பட்டன; அத்துடன் இலங்கையில் விவேகானந்த சபையினர் நிர்மாணித்த பல பாடசாலேகளின் மேற்பார்வைப் பொறுப்பும் சுவாமிகள் தலேயிலிறங்கியது.

சென்னேயில் 1927ல் தமிழ்ப் பல்கலேக்கழக விசாரணேச் சபையொன்று கூட்டப்பட்டது. புதிதாக ஓர் தமிழ்ப் பல்கலேக்கழகம் நிறுவ ஏதுவாயிருக்கவில்லே சாத்தியக்கூறுகளே ஆராய நிறுவப்பட்ட இச்சபையின் முன் சென்னேப் பல்கலேக்கழகத்தாரின் சார்பில் முதலாவதாகச் சாட்சியமளித்த பெருமை சுவாமிகளுக்குண்டு: அதன் பயனுக எழுந்ததுதான் அண்ணுமலேப்பல்கலேக் கழகம். மட்டக்களப்பை பொறுத்தவரையில் சுவாமிகளின் சேவையால் மொழிமாற்றம் மதமாற்றம் செய்யவல்ல அன்னிய அரக்கனின் பயங்கரத் திட்டங்கள் தவிடுபொடியாயின.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்ற உறுதியான இலக்கையுடையவர் சுவாமிகள் அவர்கள். சுமார் 30 வருடங்களுக்கு முன்பே சுவாமிகள் விஞ்ஞான சாத்திரத்தை தமிழொடு கலந்து தாமே கற்பித்தார்கள். உயர்தர தமிழ் இலக்கியங்களின் இலக்கணங்களே பலரும்அறிந்து, ரசித்து மொழியார்வங் கொள்ளட்டும் என்னும் நோக்கங் கொண்டு வளர்ந்தோர்சிலருக்குப் பிரத்தியேகமான புலர்வர் வகுப்பு ஒன்றையும் நடாத்தி வந்தார்.

1931ம் ஆண்டில் அண்ணுமலேப் பல்கலேகழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்ருர். தமிழ் நாட்டிலே முதன் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்னும் பதவியைப் பெற்றவர் சுவாமிகளே. அப்பதவியை வகுத்த காலம் முழுதும் மிக மிக அத்தியாவசியமாக மாணவர்க்குக் கற்றுக் கொடுப்பது நாட்டிற்கும், தமிழுக்கும், சமுதாயத்திற்கும் எம்முறையில் தொண்டுசெய்து நம்மினத்தை புத்துயிரோடு வாழவைக்கலாம் என்பதேயாகும். தீண்டாமை சுவாமிகளின் பெரும் விரோதியாகும்: அதை ஒழிப்பதற்கு பல பணிகள் புரிந்ததுண்டு. அண்ணுமலேயிலேயே தீண்டாதோர்க்காக ஓர் பாடசாலே நிறுவி இராப்படிப்புகளுக்கு ஒழுங்குகள் செய்தார்.

1949 ல் தமிழுலகம் தனது தவத்திரு செம்மலே இழந்து எல்லேயற்ற துயரடைந்தது. சுவாமிகளின் இடத்தை நிரப்பியது இத்தலே முறைக்கே கிட்டாத ஓர் துர்பாக்கியமாகி விட்டது. துறவறம் என்பது சொந்த ஆன்ம ஈடேற்றமல்ல, மனித குலத்தின் பல்முக ஈடேற்றம் என்பதை செயல் படுத்தி வாழ்ந்து சென்றவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள்: விபுலானந்த வாழ்க்கை நெறி நீடுழிவாழ்க.

## கருணநிதி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மணவைத்தம்பி மட்டுமே ஓரளவு இலங்கை அரசியலேப் புரிந்து கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வலது கைபோல இருந்து ஒத்துழைப்புத் தந்து வருகிருர். இவரது போக்கில் ஓரளவு அரசியல் தெளிவு இருக்கிறது.

இலங்கையில் தமிழினத்தின் நல்வாழ்வுக்காகப் பல தீவிர போராட்டங்களே நடத்தியதும், 'செல்வா' எனும் தூய பெருந் தலேவரின் கீழ் இயங்குவதுமான தமிழரசுக்கட்சியே ஈழத்தின் உண்மையான தி. மு. க என்பதை இலங்கை மக்கள் நன்கு அறிவார்கள். தமிழக தி. மு. க வில் இருந்து பிரிந்து போன சம்பத் கண்ணதாசன் ஆகியோரைப் போல

இலங்கைத் தமிழரசுக்கட்சியில் இருந்து நவரெத்தினம் மாணிக்கம் ஆகியோரர் பிரிந்துசென்றுவிட்டபின்பும் தமிழரசுக் கட்சியே தங்கள் கட்சி என்பதில் மக்கள் அசையாத உறுதி கொண்டுள்ளார்கள்.

அண்ணுவின் உண்மைத் தம்பிமார்களேக் கொண்டு இலங்கைத் தமிழரசுக்கட்சி இயங்கி வருகிறது. மீன்பாடும் தேனுடு தந்த சொல்லின் செல்வர் இராசதுரை யாழ்நாடு தந்த தளபதி அமிர்தலிங்கம், சாவகச்சேரி தமிழ் ஏறு நவரெத்தினம் (ஊர்காவற்றுறைச் சம்பத் அல்ல) ஆகிய அண்ணுவின் இலட்சியத் தம்பிகள் இன்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியிலேயே இருந்து உழைத்து வருகிருர்கள். தேர்தலில் இம்முறை தமிழரசுக்

கட்சி பாடிப்பாடி வெற்றி பெறப்போவது நிச்சயமான சங்கதியாகும். ஒரு வேதனே இளஞ்செழியன் கூத்துத்தான்! 'அண்ணு" என்ற மிகப்பெரிய பெயருக்கு இளஞ்செழியன் என்ற மிகச்சின்ன மனிதர் ஏன் தான் களங்கம் கற்பிக்க எண்ணுகிருரோ தெரிய தெரியவில்லே.

## கெட்டிக்காரன்...

(1ம் பக்கம் தொடர்ச்சி)

கொரியா அவரை இடைமறித்து "நீங்கள்நேரத்தை வீணுக்குகிறீர்கள்" என்று கூறியதாக ஒரு பொய்யை தினபதி வெளியிட்டிருந்தது. இதற்காகவும் தினபதி ஆசிரியர் சபாநாயகரிடம், சபையிடமும் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார்.

கடந்த ஜுலே 25ந் திகதி சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பேசியதை திரித்து பின்வருமாறு தினபதி 27ந் திகதி வெளியிட்டிருந்தது.

"பிரதமர் திரு.டட்லி சேனநாயகா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணே மீதான விவாதத்துக்கு பதில் அளித்து பேசுகையில் தாம் பதவியைராஜிஞமாச் செய்ய முன் வந்தபோது தமிழரசார் தம்மைத் தடுத்து நிறுத்தியதாகக் கூறி அதை தமிழரசுக் கட்சியினரில் எவராலேனும் மறுக்க முடியுமா என்று சவால் விட்டது தெரிந்ததே"

—பிரதமரது பேச்சு மேற்கண்டவாறு திரித்து வெளியிடப்பட்டதை ஆட்சேபித்து திரு. அ. அமிர்தலிங்கம் தினபதி மீது ஜுலே 31ந் திகதி சபையில்உரிமைப் பிரச்சினேயொன்றைக் கிளப்பியிருந்தார்.

தினபதி ஆசிரியர் தம் தவறை ஒப்புக்கொண்டு இதற்கும் வருத்தம் தெரிவித்து சபையிடமும் சபாநாயகரிடமும் பகிரங்க மன்னிப்புகோரியுள்ளார்.

தினபதி ஆசிரியர் திரு. சி. த. சிவநாயகமும் செய்தி ஆசிரியர் திரு. இரத்தினசிங்கமும் சபாநாயகரின் கூடத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபின் சனப்பிரதிநிதிகள் சபைச் சிற்றுண்டிச்சாலேயில் திரு. வி. நவரத்தினம் பா.உ. வால் தேனீர் விருந்தளித்துக் கௌரவிக்கப் பட்டனர் என்று தெரிகிறது.

## வன்னி...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

கள் இன்றும் என் உள்ளத்தைவிட்டு நீங்கவில்லே-இதற்கிடையில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி உப அதிபர் திரு. இராசசேகரம் அவர்களும் வருகிருர்கள். ஒரே உரையாடல். உரிமைப் போர்பற்றிய பேச்சுக்கள் தான்—இதற்கிடையில் மணி அடிக்கிறது. ஒருவர் முகத்தை பார்த்து ஒருவர் அழுதழுது பிரிகிருேம்.

நாட்கள் ஓடிப் பறக்கின்றன—இரண்டு வாரம் முடிந்துவிட்டன. சிறைச்சாலே வெளியில் வருகிருேம்; அமரர் இராசவரோதயம் வரவேற்கிருர். மலர்மாலேகள் குவிகின்றன — ஒரே மக்கள் கூட்டம் மூவர்ணக் கொடிகள் பறக்கின்றன காரில் பவனி நடைபெறுகிறது. பவனி கோப்பாய் தொகுதியை அடைகிறது—வீதிகள் தோறும் பூரண கும்பங்கள் மலர்மாலே அணிகிருர்கள் கதர் சால்வைகள், பட்டுச் சால்வைகள் எல்லாம் கழுத்தில் விழுகிறது-ஆயிரத்துக்கு மேற்பட்ட சால்வைகள எம்மிடம் வந்துவிட்டன இரவு எட்டுமணி வன்னியஞர் வீடு வந்து சேர்ந்தோம்.

இந்த வெகுமதிகள் எல்லாம்—எமது இயக்கத்துக்காகத் தரப்பட்டவை— இவற்றை ஏலத்தில் விற்று இயக்கத்துக்குக் கொடுப்போம். இப்படிக் கூறிஞர் தலேவர்—எப்படி அவரின் உள்ளம்—

65 பவுண் தங்கச் சங்கிலியை தானே எடுத்த தலேவர்களால் தமிழினம் வாழ முடியுமா?

வன்னியஞர் போன்றவர்கள்—வன்னியஞர் வழி வந்தவர்கள்—உரிமைக்காக என்றும் உயிர் கொடுப்பார்கள்: சொல்லில் மாத்திரம் அல்ல செயலில் சேவை செய்தவர். அவர் நாமம் வாழ்க-அவர் இலட்சியங்கள் வாழ்க!

## அறிஞர் அண்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள மக்களும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்.

தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல தொகுதிகளிலும போட்டியிடப் போவதாக தீர்மானம் போட்ருக்கிருர்கள். அப்படி போட்டியிட்டால் ஒவ்வொரு தொகுதியிலும் பத்து வாக்குகள் கூட கிடைக்குமா என்பது சந்தேகமே. இவர்கள் இப்படி இ. தி. மு. க. என்ற பெயரில் முன்யோசனேயின்றி போட்டியிட்டு படுதோல்வியடையும் போது அதனுல் யாருக்கு அவமானம்? தமிழ் நாட்டு தி. மு. கவுக்கும், பேரறிஞர் அண்ணுவின் பெயருக்கும்தான் அவமானம். இந்நாட்டுத் தமிழ் மக்கள் அனேவரும் அண்ணுவிடத்திலும், தமிழ் நாட்டுத் தி. மு. விடத்திலும் அளவிடற்கரிய பக்தி கொண்டிருக்கிருர்கள். ஆனுல் அதற்காக இங்குள்ள பித்தலாட்டக்காரர்களே-பொய் புரட்டர்களே போலிகளே-நம்பமாட்டார்கள். அரசியலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியே அண்ணுவின் பாதையில் செல்வதாக அவர்கள் அழுத்தமான நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இ. தி. மு. க. என்ற பெயரில் நடமாடும் போலிகள் சிலர் தங்கள் பொறுப்பற்ற தன்மையால்—மூன்று இலட்சம் மலேநாட்டுத் தமிழர்களுக்கு ஆவது இலங்கைப் பிரஜாவுரிமை கிடைப்பதையும் நாசமாக்கி, மலேயகத் தமிழர்களுக்கு சிங்கள வெறியர்களிடமிருந்து அடிவாங்கிக் கொடுக்கவும் முயற்சிக்கிருர்கள். வீண் கோஷங்களில் ஏமாருது—மலேயகத் தமிழர்கள் சரியான பாதையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அண்ணாவும் வன்னியரும்

'வில்லே ருழவர் பகை
கொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை'

வில்லேந்தும் வீரனது பகையைக் கூடக் கொள்ளினும், சொல் வன்மையுடையாரது பகை கொள்ளக் கூடாதது; பொல்லாதது என்கின்றார் வள்ளுவர். நாவசைந்தால் நாடசையும் சொல்வன்மையாளர், தமது சொல் முழக்கத்தால் செய்த அற்புதங்கள் பல.

'ஜேர்மானியன், உலகின் முதல் மகன். அவனே எல்லாச் சிறப்புக்கு முரித்தானவன்; வீரன்; உலகைக் கட்டியாள கூடியவன்; கட்டியாளப் பிறந்தவன்' என நாளெல்லாம் முழக்கமிட்டு, ஜேர்மானியனது இரத்தத்தைத் துடித்தோடச் செய்து, போராட்ட அரங்கழைத்து, உலகையே சுழல வைத்த ஹிட்லரிடம், சொல்வன்மை கூட்டாளியாயிருந்து உதவியது. தீமைவழிக்கு நாட்டாரைத் தனது சொல்வன்மையால் இழுத்தவன் ஹிட்லர்—

அரசியல் உலகில் சொல் வன்மை செய்த அற்புதங்கள் பல. மத உலகிலும் கூட சொல்வன்மையாளர் தமது பக்கம் மக்கள் திரள உபயோகித்த ஆயுதம் சொல் வன்மையே—

யுத்தத்தின் போது பிரிட்டிசாரைத் தட்டிக்கொடுத்தது சேர்ச்சிலின் சொல்வன்மை. இதே போன்று தம் நாட்டில் பல புரட்சிகளை ஏற்படுத்திய பல சொல் வீரரைக் கூறமுடியும்.

எமது காலத்தில் எம்முடன் வாழ்ந்து அண்மையில் அமரராய இரு தலைவர்களை எண்ணிப் பார்க்கும் போது, தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறியிருந்த பாரதகண்ட மக்களைத் தட்டியெழுப்பி, தமிழனை வீரனுக்கி கோழையைத் துணிந்தவனுக்கி நாட்டில் புது முறுக்கை, புதிய உத்வேகத்தை யூட்டியவர் அறிஞர் அண்ணா.

ஈழத்து மக்கள் வகுப்புவாதிகளால் நசுங்குண்டு, கோழைகளாய் இருந்த நேரத்தில்,-தமிழன் சிறுபான்மை என்பதற்காக, உரிமையற்ற பதுமையாயிருந்த காலத்தில் —தமிழா தமிழா தலைநிமிர் எனப்பேசி மந்திரி பதவி கண்டு, சொந்த வாழ்வுக்காகப் பல்லிளித்த தலைவர்களால் வாழ் விழந்து, வக்கிழந்து, ஏதுமற்ற பராரியாய் உழன்றபோது- கைகொடுக்க ஒரு தலைவர் தோன்றினார்: அவரே யாழ்ப்பாணம் பெற்றெடுத்த வன்னியசிங்கம்—

தமிழகத்தில் புதிய உற்சாகத்தினை தன்மான உணர்வை அண்ணா ஏற்படுத்தினார். அதே போன்று ஈழத்துத் தமிழர்களை ஒன்றாக்கி, ஓரின உணர்வுடன் தன்மானமுடன் வாழ வழிகாட்டினார் வன்னியசிங்கம்.

இருவரும் படித்தவர்கள்; பண்பாளர்கள்: தமது குடும்பத்தை மட்டுமெண்ணாது நாட்டாரை எண்ணிய நல்லவர்கள்; மேடையில் எதிரியை, எதிர்க்கருத்துக்களைச் சாடும் வன்மையாளர்கள்; தமிழால் உணர்வூட்டலாம், வாழவைக்கலாம் எனப் புது உலகு அமைத்த திண்மை செறிந்தவர்கள்—

தமிழகத்து ஒளிவிளக்கு அண்ணா-ஈழத்து ஒளிவிளக்கு வன்னியசிங்கம்—

தமிழகத்துத் தமிழர்கள் தமது வழிகாட்டியாக, ஒப்பற்ற தலைவராக அண்ணாவைக் கைக் கொண்டனர். அண்ணா வழியே தமது வாழ்வு வழி எனக் கொண்டனர். ஈழத்துத் தமிழர் தமது வழிகாட்டியாக, தம் வாழ்வின் தலைவராக வன்னியசிங்கத்தினை ஏற்றனர்.

அண்ணாவும் வன்னியரும் அமரராயினும், மக்கள் உள்ளமெங்கும் வாழ்கின்றனர். விதைத்த விதை பரந்து பயிராகியுள்ளது.

தமிழ், தமிழன், தமிழின உரிமை, தமிழனுக் கொரு ஆட்சி எனவே இருவரும் கருதினர். வாழ்வெல்லாம் பாடு பட்டனர். அதனைத் தமது வாழ்வெல்லாம் கைக்கொண்டனர். தமது எண்ணத்தின் உருவங்களாகப் பலரை உருவாக்கினர்—

மேடையில் ஏறினால்—கடலும் அமைதியாகும் அண்ணாவின் எதுகை மோனையுடன் 'செறிந்த கருத்துப் பேச்சும், தீமையைச்சாடி உண்மையை உறைப்பாகக் காட்டி நேர்மை வழிக்கு இழுக்கும் வன்னியரின் வண்டமிழ்ப் பேச்சும் ஒப்புயவர்ற்றது.

பிழை கண்டு தம் தலைவரை— ஈ. வெ. ராவை—விட்டு விலகி, புது இயக்கம் தொடங்கி, பல ஆயிரம் இதயத்தைத் தொட்டு தமிழகத்தில் புது ஆட்சியைச் சமைத்தார் அண்ணா—

சுயலாபம் கருதி மக்களை மறந்த தீயவரது பிழை கண்டு, விட்டு விலகி, புது இயக்கம் கண்டு ஈழத்தில் தமிழரின் பெரியகட்சியாக்கி தமிழனை நிமிர வழித்தார் வன்னியர்—

எதிர்க் கட்சியிலிருந்து தாடுகாத்தார் ஆரம்பத்தில் அண்ணா—அதே போன்று எதிர்க் கட்சியிலிருந்து தீமையைச் சாடினார் வன்னியர்.

பலம் வாய்ந்ததும் ஆட்சியாளரானார் அண்ணா—பலம் வந்ததும் இன்று ஆட்சியாளரானார்கள் வன்னியர் இயக்கத்தவர்கள்—

தமிழே எங்கும் எதற்கும் என எண்ணினார் அண்ணா—அதே நினைவையே கொண்டிருந்தார் வன்னியனார்.

எதிரியை முறையாகவும் வன்மையாகவும் சாடினார் அண்ணா — அதேதன்மையை ஈழத்தில் செய்து காட்டினார் வன்னியர்.

தமிழ்ப்பற்றின் நிறைகுடம் அண்ணா—தமிழ்ப்பற்றின் உருவம் வன்னியர்.

போராட்ட வழியில் இனப் பெருமை காத்தனர் இருவரும், இருவரது இலட்சியத்தையும் பின்பற்றி ஆயிரமாயிரம் தம்பிகள் திரண்டனர்; இன்னும் எங்கும் உள்ளனர்—தமிழனது உணர்வை, தொன்மையை, அறத்தன்மையை விளக்கி தமிழனைத் தமிழனாக எண்ணவைத்தார்- தமிழகத்தில் அண்ணா, ஈழத்தில் வன்னியனார்—



அண்ணாவுக்கு மெரினாவிலோர் சிலை—வன்னியருக்கு யாழ்ப்பாணத்திலோர் சிலை!

மக்களின் உள்ளத்தில் சிலையாகிவிட்டவர்கள் இவர்கள் — சொல்லேருழவர்கள் ஆகிய அண்ணாவும் வன்னியனாரும் தமிழன் உள்ளளவும் வாழ்வர்— தொண்டு செய்தோர் மறைவதில்லை. அவர் தம்தொண்டுமக்கள் உள்ளத்தில் வாழும்; என்றும் வாழ வழி அமைக்கும்—

அண்ணாவும் வன்னியனாரும் பலராய் வாழ்கின்றனர்—

நாடு வாழ உழைக்கும் சொல்லேருழவர் மறைய மாட்டார்கள். அதோ எங்கள் அண்ணா! எங்கள் வன்னியசிங்கம்!

**புதுமைலோலன்**

---

# ஆபாச பத்திரிகைகளுக்கு எதிரான இயக்கத்திற்கு ஆதரவு பெருகுகிறது!

இளந்தலை முறையினரை நாசமாக்கக் கூடிய விதத்தில் ஆபாசச் செய்திகளையும் படங்களையும் வெளியிட்டும் அரசியல் விபச்சாரம் செய்தும் வரும் தமிழ்த் தினசரிகளுக்கு எதிராக இயக்கம் தொடங்க உத்தேசித்துள்ளதாகவும், அது குறித்துத் தமிழன்பர்களின் ஆலோசனையை கோரியும் சுதந்திரன் (5-8-69) இதழில் புங்குடுதீவு தமிழன்பர் நாக. பத்மநாதன் ஓர் வேண்டுகோள் விடுத்திருந்தாரல்லவா? அவரது முயற்சிக்கு நாடெங்கிலுமிருந்து பலர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக திரு. நாகபத்மநாதன் எழுதியுள்ளதாவது:—

இன்று எம் இனத்தைக் கெடுத்து வரும் ஆபாசப் பத்திரிகைகளை விரட்டியடித்திட ஓர் இயக்கம் தேவை என்பது பற்றித் தமிழ் இதயங்களுக்குச் சமர்ப்பித்த வேண்டுகோள் வீண்போகவில்லை என்பதைப் பெருமகிழ்வோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனது வேண்டுகோள் சுதந்திரன் 5-8-69ந் திகதி இதழில் வெளிவந்ததனை அடுத்து வாசக நேயர்களின் ஆதரவு வெகுவாகப் பெருகியுள்ளது.

ஊக்கமும் ஆக்கமும் தரும் கடிதங்கள் ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து குவிந்துள்ளன. இதற்கு இத்துடனுள்ள சில கடிதங்கள் சான்று பகரும். சுதந்திரனுக்கு எம் நன்றி.

அறத்தின் அடிப்படையிலே இவ்வியக்கம் விரைவில் எழுப்பப்பட்டுக் கயமை துரத்தி அடிக்கப்படும் என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## ஆதரவு தெரிவித்து வந்த சில கடிதங்கள்

உங்களுடைய உள்ளத் துடிப்பையும் நன்னெறி நாட்டத்தையும் பாராட்டுகின்றேன். உணர்ச்சியுள்ள இரண்டொருவர் தான் பெரிய இயக்கங்களைத் தொடங்கி வளர்த்து நாட்டுக்கு நன்மை செய்துளர். எனவே நீங்களும் அயராது உழைத்தால் நாட்டுக்கு நற்றொண்டு ஆற்றலாம்.

'துன்பம் உறவரினும்
செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.'

கா. பொ. இரத்தினம்,
பா. உ., கிளிநொச்சி.

ஃ

உங்கள் போன்று என் மனதையும் பலகாலம் வேதனைப் படுத்திக் கொண்டிருக்கும் ஆபாசத் தினசரிகள், ஆபாசப் படங்கள், ஆபாச விளம்பரங்கள், அலங்கோல உடைகள் என இவைகளெல்லாம் இன்றைய உலகில் நவநாகரீகமென்ற போர்வையில் கட்டவிழ்த்து விடப்படும் காமவெறியை ஊட்டிக் கொண்டிருக்கும் பயங்கரத் தொற்று நோய்களாகும்.

இதை எதிர்ப்பாரில்லை; ஏனென்று கேட்பாரில்லை; முறியடிக்க முயல்வாரில்லை; முன்வரத் துணிவாரில்லை. இதனால் தான் எத்தனை எத்தனையோ செல்வக் குழந்தைகளான தந்தை தாயாரால் அன்பு சொரிந்து வளர்க்கப் பட்ட பெண் பிள்ளைகள் பருவம் வந்தபோது படுபாதகங்கட்கெல்லாம் உள்ளாகின்றனர்.

இன்றைய ஆபாசத் தினசரிகளும் இந்நிலைக்கு மூல காரணங்கள் என்பதை அறிந்தும் தட்டிப்பேச ஆளில்லாத தனிக்காட்டு ராஜாக்களாக இவை உலவுகின்றன.

இவைகளைத் தடுத்து நிறுத்த முன்வருவார் யாரென்று பலகாலம் எதிர்பார்த்தேன். எங்கோ ஒரு தீவிலிருந்து இதன் அபாயக் குரலொலி கேட்பதைச் சுதந்திரன் பத்திரிகை மூலமறிந்தேன், மகிழ்ந்தேன்.

உங்கள் நன்முயற்சி வளரட்டும், நல்லாதரவு பெருகட்டும். நாடு எதிர்த்தாலும் பழித்தாலும் நலன் பெறட்டும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு ஊட்டுகிறேன். ஆண்டவனருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

[illegible]
பள்ளிமுனை, மன்னார்.

சுதந்திரன் இதழில் 'ஆபாச தினசரிகளுக்கெதிராக இயக்கம் தொடங்க முயற்சி' என்ற தலைப்பில் தாங்கள் கூறிய கருத்தினை அறிந்தேன். இதையிட்டு அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன். தங்களைப் போன்று நானும் இவ்விதமான ஆபாச, அரசியல் நாகரீகமற்ற ஏடுகளை எவ்விதம் மக்கள் மத்தியிலின்று விரட்டியடிக்கலாமெனப் பல மாதங்களாக ஆலோசித்து வந்துள்ளேன்.

தந்தி, மித்திரன், தினகரன் போன்றவை ஆபாசத்திலும் தினபதி குறிப்பாக அரசியல் அநாகரிகத்திலும் ஈடுபட்டுள்ளன. இதையறிந்து எம் போன்ற இளைஞர்கள் வேதனையுறாமல் இருக்க முடியாது. மேற்கூறிய ஏடுகள் யாவும் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளால் வெளியிடப் படுகின்றன. அவர்களது மூச்சும் சிந்தனைகளும் செயல்களும் இலங்கைத் தமிழர்களை எப்படியாவது அழித்து விட வேண்டும் என்பதாகும். தமிழ் இனமானது ஒழுக்கத்திலும் பண்பிலும் சிறப்புற்று விளங்குகிறது. இதற்குச் சரித்திரவரலாறு சான்றாகும். இதைக் கெடுப்பதற்கு சிங்கள வகுப்பு வாதிகள் முனைந்துள்ளார்கள்,

அத்துடன் தமிழர்களை அரசியல் அனாதைகளாக்குவதற்காக இப்பத்திரிகைகள் (தினபதி) தமிழ்த்தலைவர்கள் மீது அபாண்டமான பொய்ச் செய்திகளை கூறிவருகின்றது. அது மட்டுமின்றி தமிழ் இனத்துள் பிரிவினைகளை ஏற்படுத்தும் விதத்தில் செய்திகளை வெளியிட்டு வருகின்றது. இதை எடுத்து விளக்க வேண்டியதில்லை. இவ்விதமான பத்திரிகா தர்ம மற்ற ஏடுகளின் கபளீகரத்தை தமிழ் மக்களிடையே பிரச்சாரப்படுத்துதல் இன்றியமையாததாகும். அவ்விதம் செய்து இப்பத்திரிகைகளை தமிழ் மக்கள் புறக்கணிக்கச் செய்தல் வேண்டும். சட்டத்தின் பிடி கொண்டும் இவற்றைச் செய்யலாம்.

—'திருமலை அன்பன்'

நீங்கள் ஆபாசப் பத்திரிகைகளுக்கு எதிர்ப்புக் கிளப்புவதற்கு வாசகர்களின் ஆதரவைக் கேட்டு சுதந்திரனில் அறிவித்திருந்தபடி நானும் அப்படிப்பட்ட பத்திரிகைகளை அழித்து ஒழிக்க என்னால் இயன்ற உதவியைச் செய்ய முன் வருகின்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

உங்கள் மகத்தான செய்கைக்கு எல்லா வாசகர்களும் ஆதரவு தந்து இப்படிப்பட்ட பத்திரிகைகள் முன்வராமற் செய்தால் இந்த நாடே திருந்தி நல்ல சமூகமாகும். இப்படிப்பட்ட பத்திரிகைகளை ஒழிக்க உண்மையான விசுவாசமுள்ள பெற்றோர் முன்வந்தால்தான் தங்கள் குழந்தைகளை நல்வழியில் அமைக்கலாம். இதில்நீங்கள் வெற்றி பெற என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இந்தப் பணியில் ஈடுபடும் தங்களுக்கு வாசகர்களாகிய நாங்கள் மட்டுமல்ல இந்த நாடே நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளது.

செல்வி து. சரோஜா-
மல்வத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத்தொடர்ச்சி)

# விடுதலைப் போரில் பாரதியின் பங்கு

தமிழை தம் தாய்மொழி என்று சொல்லவும்—கொள்ளவும் தயங்கியும், ஆங்கில மோகமும் அந்நியன் நாகரீகத்தில் தாகமும் கொண்டவர்களுக்கு தமிழின் சீர்மையையும், மேன்மையும் நினைவூட்டினுர்.

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல்
இனி தாவதெங்கும்
காணேம்"

"சொல்லில் உயர்வு
தமிழ்ச் சொல்லே
—அதைத்
தொழுது படித்திடடி
பாப்பா"

என்பன இவற்றில் இரண்டாம். செஞ்சொற் கவிஞன் தென்னமுதின் சுவையை விஞ்சும் செழுந்தமிழின் புகழ் விளங்க, தென்றலிலும் இனிமை தரும் தேன்தமிழின் மேன்மை துலங்க பைந்தமிழ் நடையில் பாமழை பொழிந்தான். அன்னுர் பண்ணேடமைந்த பாட்டால் தண்ணுர் தமிழ் மொழியே பீடுற்றது, பெருமையுற்ற தென்றல் பொய்யாகாது; மிகையாது; பொய்யானி புகழ்ச்சியாகாது.

அழிகின்ற தமிழ் கண்டும், இழிந்த வாழ்வில் இன்பங் கண்டு கொண்டிருந்த தமிழர் நிலைகண்டு,

"இந்த நிலைகெட்ட
மனிதரை
நினைத்துவிட்டால்
நெஞ்சு
பொறுக்குதில்லையே"

என்று கொந்தளிக்கும் உள்ளத்தோடு எரிமலையாய் குமுறுகின்றுர். அவர்கள் செயல் பாமன்னன் நெஞ்சில் எத்தகைய வடுவை ஏற்படுத்தியிருக்கும்? எண்ணிப் பாருங்கள்.

அடுத்து அத்தகையோரை நோக்கி அடுக்கடுக்காய் வினு வெழுப்பி விடை கோரினுர்.

பொழுதெல்லாம் எங்கள்
செல்வம் கொள்ளை
கொண்டு
போகவோ? நாங்கள்
சாகவோ?
அழுதுகொண்டிருப்
போமோ?
ஆண்பிள்ளை
அல்லோமோ?
உயிர் வெல்லமோ?

"ஊருக்கு நல்லது
செய்வேன்"—எனக்கு
உண்மை தெரிந்தது
சொல்வேன்"

என்றியம்பிய அஞ்சாநெஞ்சினர் பாரதி. உள்ளதை உள்ளந்திறந்தே சொல்லும் உரம் அவரிடம் இருந்தது. அறிந்தவற்றை அச்சமின்றி அனைவர்க்கும் அறியத்தருவது அவர் சுவாபம். பாட்டின் துணைகொண்டு நடிப்புச் சுதேசிகளை வைநயாண்டி செய்கின்றுர்; நையப்புடைக்கின்றுர்.

"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திரமு மின்றி
வஞ்சனை சொல்வா ரடி"

"கூட்டத்திற் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்தில்கொள்ளாரடி"

என்பன நடிப்புச் சுதேசிகளின்மேல் யாத்த பாடல்களிற் சில.

அதோடு அவர் ஆறுதல் கண்டு அமைத்துவிடவில்லை. ஆங்கியன் பாவெது பாடினுர்; தவறு; தன்மானமற்ற தமிழரைச் சாடினுர்.

"தொண்டு செய்யும்
அடிமை—உனக்குச்
சுதந்திர நினைவோடா?"
என்றும்

"குப்பை விரும்பும்
நாய்க்கே—அடிமை!
கொற்றத்
தவிசுழிண்டோ? என்றும்

"நாடு காப்பதற்கே—
உனக்கு
ஞானம்சிறிதுமுண்டோ?"

என்றும் வினவி தூங்கிக் கிடந்த உணர்வை துள்ளியெள வைக்க முயன்றுர். சுதந்திர உணர்வு அவர் உயிரோடு—உணர்வோடு— உதிரத்தோடு இரண்டற கலந்து அவர்தம் பாடல்களில் அங்காங்கே வெடித்து, வெளிப்போந்று துலாம்பரமாகக் காட்சியளிக்கக் காணலாம்.

பாஞ்சாலி சபதத்தை பாடும் போதும் நாடிளந்த அடிமையாக வாழும் பாரத மக்கள் எள்ளிநகையாடும் நோக்கோடுதான்.

"தேயம் வைத்திழந்தான்—
சிச்சி
சிறியர் செய்கை—
செய்தான்"

என்ற உணர்ச்சி கொப்பளிக்கப் பாடியிருக்க வேண்டும்.

ஆட்சித் திறனும் ஆட்சிப் பெலனும் ஆயுதவலியும் கொண்ட ஆண்ட வெள்ளையரை வேளியேற்ற கனவிலும் நினைவிலும் விரும்பிய கவிஞர் ரஷ்ய சரித்திரத்தில் ஜார மன்னன் விழ்ச்சியை மட்டும் "இமயம் வீழ்ந்தது போல் வீழ்ந்து பட்டான் ஜார் என்ற பேர் இசைத்த பெரும்பவி" என்று பாடியமைக்குக் காரணம் என்னவாயிருக்க முடியும்?

## க. மனேகரன்

ஆட்சியாளருக்கு அடங்கி ஒடுங்கி அடக்கு முறைக்கு ஆளாகி அவதியும் அல்லலும் உற்று நாதியற்று நசுக்கப் பட்டு வாழ்ந்த மக்களை நோக்கி,

"வலிமையற்ற தோளினுய்
போ! போ! போ!
மார்பிலொடுங்கினுய்—
போ! போ! போ!
பொலிவிழந்த முகத்தினுய்
போ! போ! போ!
பொறியிழந்த கண்ணினுய்
போ! போ! போ!

என்று பாடி அவர்களை ஒட ஒட விரட்டினுர். கோழைகளாய்—மோழைகளாய் வாழ்ந்தவர்களைத் தூற்றிடும் செந்தமிழ் பாவலன் காளைகளாய்- களிறுகளாய் வாழ்ந்த வீரரை போற்றுவதில் பின் நின்றுரில்லை. அவர்களுக்கு அறை கூவல் விடுக்கின்றுர்; அழைப்பிதழ் அனுப்புகின்றுர்.

"ஒளி படைத்த கண்ணினுய்
வா! வா! வா!
உறுதி கொண்ட—
நெஞ்சினுய் வா! வா! வா!
களி படைத்த மொழியினுய்
வா! வா! வா!
கடுமை கொண்ட—
தோளினுய் வா!வா!வா!

அடுத்த தலைமுறையாவது அடுத்தவர் இளைக்காத—சளைக்காத பாரமபரையாக உருவெடுக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட பாரதியார் பாப்பாக்களை அழைத்து உரையாடுகின்றுர், ஒட்டி உறவாடுகின்றுர் உணர்வூட்டுகின்றுர்.

"பாதகஞ் செய்வோரைக்
கண்டால்
பயங் கொள்ளலாகாது-
பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா
அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு
பாப்பா!"

பாப்பாபாட்டைப் பார்த்தீர்களா?

ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் அழைக்கின்ற பாரதியார் அகில பாரதமே ஒன்றுபட்டு, ஒரணியில்— ஓர் குடைக்கீழ் திரண்டு உற்சாகமுடனும், உத்வேகமுடனும் இடையாருது உழைத்தாலன்றி பாரத சுதந்திரம் கிடைப்பது பகற்கனவென்றுசந்தேக விபரீதமற உணர்ந்தார் அன்று பாரதமோ சாதி பிரிவுகளாலும் சமயப்பிளவுகளாலும் சின்னுபின்னப் பட்டுக்கிடந்தது, பாகிஸ்தான் பிரிவினைக் கொள்கையும் வலுப்பெற்றிருந்தது. இந்நிலையில் இவர்களிடையில் கவிஞரின் குரல் கணீரென்று ஒலிககின்றது.

### ஜாதி மதங்களைப் பாரோம்

அன்று பாகிஸ்தானையும் தன்னகத்தே கொண்ட பாரதத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை முப்பது கோடியாம் பாரத மக்களை ஏறெடுத்து நோக்கி.

முப்பது கோடியும் ஒன்ருய் வாழ்வோம் என முழங்கினுர், பாரத தேசத்தைப் பார்த்து.

"முப்பது கோடிவாய் திள
னிசை முழங்கவும்
அறுபது கோடிதோள்—
உயர்த்துனக் காற்றவும்
திறனிலான் என்றுனை
யாவனே செப்புவன்?"
என வினவினுர்.

அவர்கள் செவிகள் அனைத்திலும் பாட்டுக்கோர் புலவனும் பாசறைக்கவிஞனின் வெண்கலக்குரல் மீண்டும் ஒலித்தது

"தாயின் மணிக்கொடி
பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்
திட வாரீர்"

திக்கற்றுக் கிடந்தவர்கள் திரங்கொண்டு திக்கெட்டும் இருந்து திரளவே,

என்று தணியும் இந்த-
சுதந்திர தாகம்?
என்று மடியும் இந்த
அடிமையின் மோகம்?"

என்று புரட்சி பாக்களைப் பாடி அவர்கள் உள்ளத்தில் சுதந்திர தாகத்தையும் மோகத்தையும் விதைத்து வேகத்தை வளர்த்தார்.

"வீரசுதந்திரம் வேண்டி
நின்றுர் - பின்
வேறென்று கொள்வாரே"!
என கவிபாடி அதை மேன்மேலும் கொழுந்து விட்டெரியச் செய்தார்.

சிலரிடம் பாரதியின் பாடல்செயலாகமிளிர்ந்தது இவரது போதனையை சாதனையில் நிலைநாட்ட முற்பட்டவர்களில் முன்வரிசையிலிருப்போரில் முதலிடம் பெற்றவர் செக்கிழுந்த செம்மல் சிதம்பரனுர் எனலாம். பாரதியின் காலத்தின் நாட்டு விடுதலையில் நாட்டம்கொண்டவர்களை காட்டி இனைக்கும் சிறைச்சாலையை மாங் குயில் கூவும் பூஞ்சோலையாகக் கருதி வெஞ்சிறை புகுந்தவர்கள் பலரன்று ஒரு சிலரேயாம்.

"மோலோர் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர் செக்கடியில்
நோவதுவும் காண் கி
லையோ?"

"மாதரையும் மக்களையும்
வன் கண்மையாற் பிரிந்து
காதலிளைஞர்
கருத்தழில் காணுயோ?"

என்னும்பாடல்களில் சிதம்பரனுரையே குறித்தார் போலும்.

"பஞ்சமும் நோயும்நின்-
மெய்யடியார்க்கோ?"
பாரினில் மேன்மைகள்
வேறினியார்க்கோ?"

என்ற கவிதையடிகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாகவும், அதன் கருத்து உள்ளத்தை உருக்கும் ஆற்றல் உடையதாகவும் இருக்கக் காணலாம்.

வரகவியின் வீரவரிகளால் பாரதமக்கள் வீறும், வீரம் வரவும், வளரவும் பெற்றுர்கள். பாரதி மூட்டிய கனல் காற்றேடு தீயும் கலந்தாற் போல நாடெங்கும்விரைந்து பரந்து செறிந்தது; நாளும் பொழுதுமாய் அது வளர்ந்து நாளாவட்டத்தில் பாரத நாட்டிற்கும் அதனையடுத்து ஈழமணித்திரு நாட்டுக்கும் சுதந்திரத்தை ஈட்டிக் கொடுத்தது. பாரதத்திற்கு ஆட்டுத் தோல் விற்க வந்து ஆட்சி தொடங்கி சொந்த நாட்டானைச் சுரண்டி சுக வாழ்வு வாழ்ந்த அந்நியர்கள் ஆட்டம்காணவும்,ஓட்ட மெடுக்கவும் வைத்த சக்திகள் பலவாம்; சுதந்திரச் சிற்பிகள் பலராம். அவைகளுள் பாரதி பாடல்களுக்கும் பிரதான இடமுண்டு, அவர்களுள் பாரதியும் பெரும் பங்கு வகிக்கின்றுர் என்றல் —அது மறுக்கவோ—மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

விழியனைய கன்னல்மொழி இன்னல்களுக்கு ஆளாகி அழிய, செந்தமிழர் வாழும் பைந்தமிழ் பிரதேசங்களை பகைவர்கள் பறித்துக் கொள்ள, இழக்கக் கூடா உரிமைகளையும் இழந்து தமிழர் என்று சொல்லிக் கொண்டு வாழுகின்ற நாங்கள் விடுதலைக் கவிக்கு ஆண்டு தோறும் விழா வெடுக்க வேண்டும். பாரதி பாடல்களைப் பாரெங்கும் பரப்ப வேண்டும்!

வாழ்க பாரதி! வளர்க
அவர்புகழ்!



சுதந்திரன் விற்பனையாளர்

வத்தளை

ஏ. டி. வி கந்தசாமி அன்கோ
191, 193, நீர்கொழும்பு வீதி, வத்தளை.



கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்
14 டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிலோன் தியேட்டர்ஸ்சாரின் திரையில் வெகு விரைவில்

ரவிச்சந்திரன், ஜெயலலிதா, அசோகன், சுந்தரராஜன், நாகேஷ், மனோரமா, வி. கே. ராமசாமி, பார்வதி, இந்திராதேவி, தனம், நடித்த,

# அன்று கண்ட முகம்

இசையமைப்பு: கே. வி. மகாதேவன் பாடல்: கவிஞர் கண்ணதாசன்
பின்னணி: டி. எம். சௌந்தரராஜன் பி. சுசீலா, எல். ஆர். ஈஸ்வரி

5 வது வாரமாக
செல்லமஹாலில்

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, நம்பியார், அசோகன், ஷீலா, நடித்த,



# புதிய பூமி

1 0வது வாரமாக ஜனவெள்ளம் பெருக்கெடுத்து காட்சியளிக்கிறது!



| செண்ட்ரல் | ராணி | ஜோதி |
|---|---|---|
| (மருதானை) | (யாழ்ப்பாணம்) | (திருமலை) |

நடிகர்திலகம் ★ சிவாஜிகணேஷன் (இரு வேடங்களில்)
கவர்ச்சிக்கன்னி ★ ஜெயலலிதா, என்.எம். நம்பியார், நாகேஷ் மனோரமா, சௌகார்ஜானகி, வசந்தா மற்றும் பலர் நடித்த
சிவாஜிகணேஷன் அளிக்கும் அருண் பிரசாத் மூவிஸ்

# எங்க ஊர் ராஜா

கதை வசனம்: பாலமுருகன், டைரக்ஷன்: P. மாதவன்,
இசை மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்

விரைவில் எதிர்பாருங்கள்!!

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஜெயலலிதா அசோகன் சோ நடித்த

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்

# அடிமைப் பெண்

(ஈஸ்ட்மன் கலர்)


2-வது வெற்றி வாரம்!

| கெப்பிட்டல் | ராஜ் |
|---|---|
| (கொழும்பு) | (நீர்கொழும்பு) |

ரவிச்சந்திரன், ராஜஸ்ரீ, நாகேஷ், ஸ்ரீரஞ்சனி, அசோகன், வசந்தா, மனோகர், விஜயஸ்ரீ நடிக்கும்

# நீயும் நானும்

இசை: எம். எஸ். விஸ்வநாதன், டைரக்ஷன்: ராமண்ணா



5வது வாரம்

| கிங்ஸ்லி | பிளாஸா | வெலிங்டன் | விஜயா |
|---|---|---|---|
| (கொழும்பு) | (வெள்ளவத்தை) | (யாழ்நகர்) | (மட்டுநகர்) |

ரங்காராவ், அஞ்சலிதேவி, பேபிரோஜாரமணி, பாலையா, எல். விஜயலட்சுமி, ஏ. கருணாநிதி, கீதாஞ்சலி, வாணிஸ்ரீ மற்றும் பலர் நடிக்கும்

# பக்த பிரகலாதா

ஈஸ்ட்மன் கலர்


இப்பத்திரிகை, சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969 வருடம் செப்டம்பர் மாதம் 25-ந் திகதி [illegible] அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org